# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

இதழ் 260 சனி, நவம்பர் 11, 2023 13 பக்கங்கள்





ஆய்வாளர்

செல்வின் மரியாம்பிள்ளை செவ்வி

## சீன தூதுவரின் வடக்கு வருகையின் பின்னணியில் பூலோபாய திட்டம்?!

## திருப்பு முனையில் தமிழரசு!



பதவி துறப்பாரா சம்பந்தன்?

அகிலன்



# மத்தியகிழக்கில்

## ஒரு பிராந்திய போர் உருவாகும் சூழ்நிலைகள் உருவாகின்றன

வேல்ஸ் இல் இருந்து அருஸ்



© 2023 இலக்கு இணையம்

## வடக்கில் முதலீடுகளை மேற்கொள்ள சீன நிறுவனங்கள் ஆர்வம்

பல தரப்பட்ட முதலீடுகளை மேற்கொண்டு வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யவும், அங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் சீன நிறுவனங்கள் ஆர்வமாக இருப்பதாக கடந்த ஞாயிற்றுக் கிழமை (5) வட மாகாணத்திற்கு பயணம் மேற்கொண்ட இலங்கைக்கான சீன தூதுவர் கியூ சென்கொங் தெரி வித்துள்ளார்.

யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளுக்கு பயணம் மேற்கொண்ட சீன தூதுக்குழுவினர் 37.5 மில்லியன்



ரூபாய்கள் பெறுமதியான உதவிப் பொருட்களை 5000 மக்களுக்கு வழங்கியிருந்தனர்.

மாவட்ட செயலகங்கள், சைவ ஆலயங்கள், தேவாலயங்கள் மற்றும் பௌத்த விகாரைகளில் 10 உதவி நிலையங்கள்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## இந்திய ரோட்டரி கழக அங்கத்தவர்கள் திருமலை விஜயம்




இந்திய ரோட்டரி கழக அங்கத்தவர்கள் பின் தங்கிய பகுதியில் வசிக்கும் பாடசாலை மாணவர்களின் மத்தியில் கல்வி தரத்தை மேம்படுத்து வதற்காக"கல்வி சக்தி" என்னும் செயல் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக கடந்த புதன்கிழமை(8) திருகோணமலை ரோட்டரிகழகஅங்கத்தவர்களை சந்தித்தார்கள்.

திரு மோகன்குமார் - தலைவர் பெங்களூரு உல்சூர் (Ulsoor) ரோட்டரி கழகம்,. திரு. R.P.ஷெட்டி, திரு ரவி, திரு.G. சேகர், & திரு..V, சோமசுந்தரம் (பெங்களூரு உல்சூர் ரோட்டரி கழகம்,) திரு.S,பஞ்சநாதன் - பெங்களூரு உத்யோக் (Udyog) ரோட்டரி கழகம், மற்றும் திரு P .நாகராஜன் - "கல்வி சக்தி" செயல் திட்ட இணைப்பாளர்,

தொடர்ச்சி 11 ஆம் பக்கம்

## குருதிப் பரிசோதனை மூலம் 50 புற்றுநோய்களை கண்டறியலாம்

மனிதர்களின் குருதியை பரிசோதனை செய்வதன் மூலம் 50 வகையான புற்றுநோய்க்கான அறிகுறிகளை கண்டறியும் தொழில்நுட்பத்தை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

பிரித்தானியாவில் இந்த பரிசோதனை 5,461 நோயாளர்களில் மேற்கொள்ளப்பட்டு வெற்றி பெற்றுள்ளது. பரிசோதனைகள் செய்யப்பட்டவர்களில் 323 பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

உலகில் முதல் தடவையாக




இந்த பரிசோதனை வெற்றி பெற்றுள்ளதானது எதிர்வரும் காலங்களில் புற்றுநோய்களை மருத்துவர்கள் விரைவாக கண்டறிந்து உரிய சிகிச்சை மூலம்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## இஸ்ரேல் நடத்தி வரும் இனஅழிப்பை நிறுத்தக் கோரி தேசிய சமாதான மாநாடு




பாலஸ்தீன விடுதலையை வலியுறுத்தியும், பாலஸ்தீன அப்பாவிகள் மீது இஸ்ரேல் நடத்தி வரும் காட்டுமிராண்டித் தனமான இன அழிப்பை நிறுத்தக் கோரியும் கொழும்பில் *We are one* அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட "தேசிய சமாதான மாநாடு" கடந்த புதன்கிழமை(8) மாலை கொழும்பு, ஹட்பாக் மைதானத்தில் நடைபெற்றது.

கொட்டும் மழையிலும் திரண்டிருந்த பெரும் மக்கள் கூட்டத்தில் பௌத்த, இந்து, கிருஸ்தவ, இஸ்லாமிய மத குருமார்கள், அனைத்து கட்சிகளின் தலைவர்கள் அனைத்து இன, மதங்களை சேர்ந்த பொதுமக்கள், ஆளும், எதிர்க்கட்சிகளை பிரதிநிதித்துவப் படுத்திய தலைவர்கள் என பெருந்திரளான மக்கள் பங்கெடுத்தனர்.

இலங்கைக்கான பாலஸ்தீன தூதுவர் சிறப்பு அதிதியாக

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## காசா மீது வீசப்பட்ட 30,000 தொன் வெடிகுண்டுகள்



காசாவில் இடம்பெறும் போரில் பொதுமக்களின் இழப்புக்கள் நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றது. அங்கு இடம்பெறும் போரில் இது வரை யில் 10.328 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 4,237 சிறுவர்கள் மற்றும் 2,719 பெண்கள் ஆவார். மேலும் 26000 பேர் காயமடைந்துள்ளதுடன், 2300 பேர் காணாமல்போயுள்ளனர்.

இதுவரையில் 48 ஊடகவியலாளர்களும், 493 மருத்துவத்துறை ஊழியர்களும் 18 அவசரநிலை பாதுகாப்பு அதிகாரிகளும் கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரேலின் வான் தாக்குதல்களினால் 70 விகிதமான மக்கள் தமது வீடுகளை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

இதுவரையில் இஸ்ரேல் 30,000 தொன் வெடிமருந்துகளை பயன்படுத்தியுள்ளது. அதாவது ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 82 தொன் வெடிமருந்துகள். 50 விகிதமான வைத்தியசாலைகளும் 62 விகிதமான சுகாதார நிலையங்களும் சேதமடைந்த நிலையில் மூடப்பட்டுள்ளன.

ஏறத்தாள 220,000 வீடுகள் சேதமடைந்துள்ளன. அவற்றில் 10 விகிதமானவை மனிதர்கள் மீண்டும் வாழமுடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளன. 40,000 வீடு களும், 88 அரச திணைக்கள கட்டிடங்களும் முற்றாக அழிந்துள்ளன. 60 பாடசாலைகள் முற்றாக அழிவடைந்ததுடன், 222 பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. மாணவர்களின் கல்வி முற்றாக தடைப்பட்டுள்ளது. 56 மசூதிகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதுடன், 192 மசூதிகளும், 3 தேவலையங்களும் சேதமடைந்துள்ளன.

## அமெரிக்காவின் தாக்குதல் விமானத்தை சுட்டுவீழ்த்திய யேமன் படையினர்

யேமனிற்கு அண்மையாக உள்ள வான்பரப்பில் பறப்பில் ஈடுபட்ட அமெரிக்காவின் ஆளில்லாத தாக்குதல் மற்றும் உளவு விமானமான எம்.கியூ-9 என்ற 56 மில்லியன் டொலர்கள் பெறுமதியான விமானத்தை கடந்த புதன்கிழமை (8) யேமனின் ஹாதீஸ் அமைப்பினர் சுட்டு வீழ்த்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பலஸ்தீன-இஸ்ரேல்போரில் பலாஸ்தீனத்திற்கு ஆதரவாக களமிறங்கியுள்ள யேமன் அரசு இஸ்ரேலை நோக்கி ஏவுகணைகள் மற்றும் ஆளில்லாத விமானங்கள் மூலம் 4 தடவைகள் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தது.

இந்த நிலையில் இஸ்ரேல்



மற்றும் அமெரிக்க படையினர் செங்கடல் பகுதிக்கு தமது கடற்படை கப்பல்களை நகர்த்தியிருந்தனர். கப்பல்களில் இருந்து ஏவப்படும் ஏவுகணைகள் மூலம் யேமனின் ஏவுகணைகளை சுட்டு வீழ்தியதாக அமெரிக்கா தெரிவித்த நிலையில் தற்போது இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது. தனது விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதை அமெரிக்காவும் உறுதிப்படுத்தியுள்ளது.

## இந்தியாவில் இருந்து வருபவர்கள் அகதித்தஞ்சம் கோர முடியாது– பிரித்தானியா



இந்தியா மற்றும் ஜோர்ஜியா போன்ற நாடுகள் பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதால் அந்த நாடுகளில் இருந்து வரும் மக்கள் பிரித்தானியாவில் அகதித் தஞ்சம் கோர முடியாது என பிரித்தானியாவின் உள்துறை அமைச்சர் சூயல்லா பிரவர்மன் கடந்த வியாழக்கிழமை (9) தெரிவித்துள்ளார்.

படகுகள் மூலம் சட்ட விரோதமாக பிரித்தானியாவிற்குள் நுளைபவர்களை தடுக்கும் சட்ட மூலத்தை பிரித்தானியா பிரதமர் ரிசி சுனாக் கொண்டுவந்துள்ளார். இதன் அடிப்படையில் பல நாடுகள் பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த வருடம் 26,000 பேர் படகுகள் மூலம் சட்டவிரேதமாக வந்துள்ளனர். படகுகள் மூலம் வரும் இந்தியர்கள் எதிர்வரும் காலத்தில் அகதித்தஞ்சம் கோர முடியாது. எனவே அவர்கள் மீண்டும் தமது நாட்டுக்கு அனுப்பப்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முள்ளிவாய்க்கால் கஞ்சியை நினைவுபடுத்தும் காசாவின் அவலங்கள்



*காசாவில் இடம்பெறும் போர் மிகப்பெரும் மனிதப்பேரவலமாக மாற்றம் பெற்றுவருகின்றது. போரை நிறுத்த முடியாது ஐ.நா செயற்திறன் அற்று இருக்கும் அதேசமயம் அங்கு தினமும் 136 குழந்தைகள் கொல்லப்படுகின்றதை உலகம் வேடிக்கை பார்த்து நிற்கின்றது.*

*காசா பகுதிக்கான உணவு விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் பாண் மற்றும் ரொட்டிகளை வாங்குவதற்குமக்கள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. காசாவின் மக்கள் தொகையில் 50 விகிதமானவர்கள் சிறுவர்களாக உள்ள நிலையில் அங்கு மிகப்பெரும் பட்டினி அவலம் நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.*

*அதேசமயம் கஞ்சிக்காக மக்கள் நீண்ட நேரம் காத்திருப்பதும் அதனை பெற்றுக்கொள்வதற்காக சிறுவர்களும் குழந்தைகளும் ஏங்குவதும் இந்த நூற்றாண்டின் அவலமாக பார்க்கப்படுகின்றது.*



*முள்ளிவாய்க்கால் இலங்கை அரசின் திட்டமிட்ட உணவுத் தடையை தொடர்ந்து கஞ்சியை அருந்தி இறுதிநேரத்தில் மக்கள் உயிர்வாழ்ந்தது போன்ற நிகழ்வை அங்கு காணக்கூடியதாக இருந்தது.*

*அன்று பல பத்தாயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதற்கு ஐ.நாவின் தவறே காரணம் என ஐ.நாவின் நிபுணர்குழு அறிக்கை தெரிவித்தபோதும். அதற்கு பொறுப்பானவர்கள் தண்டனையில் இருந்து தப்பியதே 14 ஆண்டுகள் கடந்தும் அவ்வாறான அவலங்கள் தொடர்வதற்கான காரணம் என அவதானிகள் தெரிவித்துள்ளனர்.*

*அதேசமயம் கடந்த 33 நாட்களாக மட்டுப்படுத்தப்பட்ட உணவு மற்றும் குடிநீர் விநியோகம் காரணமாக சிறுவர்கள் நீருக்காக போத்தல்களுடன் அலைவதும், குடிநீர் பெற்றுவர சென்றவர்கள் குண்டுத்தாக்குதல்களில் இறப்பதும் காசாவில் வழமையாகிவிட்டதாக அங்கிருத்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*காசாவில் உள்ள மக்கள் இரண்டு அரபு ரொட்டிகளையே தினமும் உணவாக உட்கொள்கின்றனர். அங்கு மிஞ்சியிருக்கும் மாவில் அதனைதான் அவர்களால் உண்ணமுடியும் என ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரியான Thomas White தெரிவித்துள்ளார்.*

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

இலக்கு

# இறைமையை இல்லாதொழிக்க மனிதரை இல்லாதொழிக்கும் சிறிலங்கா - இஸ்ரேயல் அரசியல்

காசாவிலிருந்து கிடைக்கும் தகவல்களும் தரவுகளும் அங்கு இஸ்ரேயலின் மனிதப்படுகொலையில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பலஸ்தீனியர்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட தரவுகளையும் அதில் கிட்டத்தட்ட அரைவாசிபேர் சிறுவர்கள் என்ற வேதனைமிகு தகவல்களையும் ஒவ்வொரு பத்துநிமிடங்களுக்கும் ஒரு சிறுவர் என்ற வீதத்தில் பலஸ்தீனிய மக்கள் இனமே இனப்படுகொலையால் கொன்றழிக்கப்படுகின்றது என்ற நடைமுறை உண்மையையும் உலகுக்கும் அனைத்துலக சமூகத்துக்கும் உறுதிப்படுத்துகின்றன. இது தேசிய பாதுகாப்பு நடவடிக்கை என்ற பெயரில் இஸ்ரேயல் திட்டமிட்ட பலஸ்தீனிய மக்கள் இனஅழிப்பை மேற்கொள்கின்றார்கள் என்ற விழிப்புணர்வை உலக மக்களிடையிலும் உலக நாடுகளிடையிலும் வளரச்செய்து வருகிறது. இது ஒரு தேசஇனத்தின் மக்கள் இறைமையை இல்லாதொழிக்க அந்த மக்கள் இனத்து மனிதரையே இல்லாதொழித்தல் என்ற அரசியல் தத்துவமாகவே இன்று இஸ்ரேயலால் பலஸ்தீனியர்கள் மேலும், 2009 முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பில் சிறிலங்காவால் ஈழத்தமிழ் மக்கள் மேலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதை உலகு அறியும்.

இனஅழிப்பை செய்யும் ஆட்சியாரளர்கள் தங்கள் நாட்டின் இறைமையையும் ஒருமைப் பாட்டையும் பாதுகாக்கும் தேசிய பாதுகாப்பு நடவடிக்கை என நியாயப்படுத்தும் உத்தியாகவே இது தொடர்கிறது. இதனை இந்தப்பிரச்சினையை பலஸ்தீனிய மக்களுக்கும் ஈழமக்களுக்கும் உருவாக்கிய பிரித்தானியா உட்பட இதனை இன்று வரை வளர்த்து எரிகின்ற நெருப்பில் குளிர்காய்கின்ற அமெரிக்கா மற்றும் இந்த மேற்குலகநாடுகளின் அணிகள் இனஅழிப்பாளர்களான இஸ்ரேலிய - சிறிலங்கா அரசாங்கங்களுக்கு எப்பொழுதும் பேராதரவு அளிப்பதுவே இன்றைய அறிவியல் எழுச்சி பெற்ற உலகிலும் இனஅழிப்பும் மனிதப்படுகொலைகளும் நாளாந்த அரசியலாகத் தொடர்வதற்கான காரணங்களாக உள்ளன. இதனாலேயே, சிறிலங்காவின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா கொழும்பில் தனியார் விழாவொன்றில் உரையாற்றுகையில் இஸ்ரேலியர்கள் கமாஸ் பயங்கரவாதிகளை இல்லாதொழிப்பதற்கு அது தேசிய பாதுகாப்பென்று இஸ்ரேயலுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கும் அமெரிக்கா, நாங்களும் இதே செயலைச் செய்தமைக்கு எங்களை ஏன் ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் ஆணையகத்தில் குற்றப்படுத்துகிறது? என எதிர்க்கேள்வி எழுப்பியதும் அல்லாமல் ஐக்கிய நாடுகள் சபை தங்களின் செயலை ஏற்றுத் தங்களுடன் தொடர்பு கொண்டால் மட்டுமே அதன் கேள்விகளுக்குப் பதில் எதிர்காலத்தில் சிறிலங்கா அளிக்கும் என ஐக்கிய நாடுகள் சபைக்கே முன்நிபந்தனையும் அந்தக் கூட்டத்தில் விதித்துள்ளார். ரணில் விக்கிரமசிங்காவின் இந்தக் கூற்றுக்கு சமூகவலைத் தளத்தில் பதிலிட்ட ஒருவர் இந்தக் கூற்றால் ரணில் சிறிலங்கா இனஅழிப்பு செய்தமையை ஏற்று அவரே வெளிப்படுத்திய ஒன்றாக அமைகிறது எனக் கூறியுள்ளமை முக்கியமாகப் பார்க்கப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது.

மேலும், இஸ்ரேலியர்களுக்கு யெருசலேம் பலஸ்தீனிய பகுதிகள் அவர்களின் தொன்மைத் தாயகமாக இருந்தாலும் வரலாற்றின் பரிணாமத்தில் அதனை அவர்கள் இழந்து 985 ஆண்டுகள் ஒரு இஸ்ரேலியர் கூட அந்தப் பகுதிகளில் வாழாத நிலையில், பின்னர் 1945இல் யூதரான அயன்ஸ்டின் அணுக்குண்டு தயாரிப்புக்கான பொறிமுறையினைக் கண்டறிந்த யூதர்களின் அறிவியல் எழுச்சியின் பின்னணியிலும், உலகெங்கும் அரசியல் புகலிடம் பெற்று வாழ்ந்த யூதர்களின் சமூக முதலீடுகளின் பலத்தினாலும் யேர்மனியரான ஹிட்லர் நடாத்திய யூத இனப்படுகொலைகளின் தாக்கத்தால் உலகில் யூதர்களுக்கான அனுதாப அலை உச்சமானதாலும், பிரித்தானிய காலனித்துவ நாடாக இருந்த பலஸ்தீனியத்தில் யூதர்களை பலஸ்தீனிய மக்களுடன் பேச்சுவார்த்தை எதுவும் நடத்தாது, தாங்கள் கொண்டு வந்து குடியமர்த்தினதுமல்லாமல், இஸ்ரேலிய அரசுக்குள் அடக்கப்பட்ட மக்களாகப் பலஸ்தீனியர்களை அவர்களின் சொந்த தாயகத்திலேயே மாற்றியதால் அவர்கள் நில இழப்பும் தேசிய வாழ்வு மறுப்பும் தன்னாட்சி உரிமைப் பறிப்பும் அடைந்து இஸ்ரேலியர்களால் அவர்களின் இறைமையை அழிக்க அவர்களையே அழிக்கும் நாளாந்த வாழ்வில் அல்லலுற வைத்துள்ளார்கள்.

ஆனால் இலங்கைத் தீவில் இரு தேசமக்களாகத் தனித்துவமான அரசுக்களுடன் விளங்கிய தமிழ், சிங்கள மக்களை 1833இல் ஒருநாடாக கோல்புறூக் கமரோன் அரசியல் சீர்திருத்தத்தின் வழி மக்களது விருப்பின்றி இணைத்து, இலங்கைத் தேசியம் இலங்கை அரசாங்கம் என்ற கட்டமைப்புக்களைச் செயற்கையாக உருவாக்கிய பிரித்தானியா, 115 ஆண்டுகள் தமிழர்களின் இறைமையையும் சிங்களவர்களின் இறைமையையும் தங்கள் ஆட்சியில் வைத்திருந்து, 1948 இல் இலங்கைக்குச் சுதந்திரம் கொடுப்பதாக சிங்களப் பெரும்பான்மைப் பாராளுமன்ற ஒற்றையாட்சி முறை அரசாங்கம் ஒன்றுக்குள் தமிழர்களின் இறைமையையும் பகிர்ந்து இன்றைய ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினையை உருவாக்கியது. இது முற்றிலும் பலஸ்தீனிய மக்களின் தேசியப் பிரச்சினையில் இருந்து மாறுபட்ட வேறுபட்ட ஒன்று. எனவே அங்கு முயற்சிக்கப்படும் ஒருநாட்டுக்குள் இருதேசங்கள் என்ற தீர்வு கூட ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வாக மாட்டாது. அவ்வாறே கூட்டாட்சி முறைமைகளோ ஒன்றிய ஆட்சி முறைமைகளோ அல்லது ஒற்றையாட்சிக்குள் கண்ணியமான வாழ்வு என்ற இந்திய முறைமையோ ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக மாட்டாது. ஏனெனில் சிங்கள பௌத்த பேரினவாதிகளின் 1948 முதலான சிங்களப் பெரும்பான்மைப் பாராளுமன்ற ஆட்சியாளர்கள் 1978 முதல் 2009க்கு இடைப்பட்ட காலம் தவிர்ந்த இன்றுவரையான முழுக்காலத்திலும் பாராளுமன்றக் கொடுங்கோன்மை ஆட்சியாளர்களாகத் தங்கள் ஆட்சியை முன்னெடுத்து ஈழத்தமிழர்களின் இறைமையை அழிக்க ஈழத்தமிழர்களின் இருப்பை அழிக்கும் இனஅழிப்பையே தங்கள் ஆட்சியாக முன்னெடுத்து வருகின்றனர். இந்நிலையில் ஈழத்தமிழர்களின் உள்ளக தன்னாட்சி சிறிலங்காவால் இழக்கவைக்கப்பட்டுள்ளதால் அவர்களின் வெளியக தன்னாட்சியின் அடிப்படையில் அவர்களுக்கான அரசியல் எதிர்காலத்தை அவர்களே தீர்மானிக்கும் தன்னாட்சி உரிமையை உலகநாடுகளும் உலக அமைப்புக்களும் அங்கீகரிப்பது ஒன்று மட்டுமே ஈழத்தமிழர்களைச் சிறிலங்காவின் இனஅழிப்பில் இருந்து பாதுகாத்து அவர்களின் அமைதி வாழ்வை உறுதிப்படுத்தும் என்பதே இலக்கின் இறுதியானதும் உறுதியானதுமான ஈழத்தமிழ் மக்களின் அனுபவங்களின் அடிப்படையிலான வரலாற்று உணர்விலான கருத்தாக உள்ளது. இதனால் ஈழத்மிழர் தேசிய விடுதலைப் போராட்டம் என்னும் அவர்களின் மண்ணையும் மக்களையும் காக்கும் போராட்டம் நியாயமானது பயங்கரவாதமல்ல. அவர்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலான தொன்மையுடனும் தொடர்ச்சியுடனும் உள்ள தங்களின் இறைமையை, வாழ்வுக்கான அரசாக மீள்உற்பத்தி செய்வது அவர்களின் வாழ்வின் மீட்பேயன்றிப் பிரிவினைவாதம் அல்ல. இன்று மட்டுமல்ல சிறிலங்கா ஈழத்தமிழர்களின் மேலான இனஅழிப்பை தொடங்கிய நாள் முதலாக அதுவும் அதனது நட்பு நாடுகளும் தங்கள் உடன்பிறப்புகளின் உயிரையும் உடமைகளையும் நாளாந்த வாழ்வையும் இல்லாதொழிப்பதை தடுத்து நிறுத்த மனிதாயத்தால் தங்கள் உயிரையே அர்ப்பணித்து தேசிய வீரர்களாகப் போற்றப்படுபவர்களுக்கு மாவீரர் தீபமேற்றி வீரவணக்கம் செலுத்தி அவர்களின் தடங்களை மண்ணையும் மக்களையும் மீட்கவேண்டுமென்ற உயர் இலட்சியத்தைத் தாங்களும் தொடருவோம் எனத் தங்கள் உறுதி மொழியை ஈழத்தமிழர்கள் புதுப்பிக்கும் தேசிய நாள்தான் கார்த்திகை 27 மாவீரர் நாள். இந்நாளில் புதுப்பிக்கும் உறுதிமொழிக்கு உண்மையுள்ளவர்களாகத் தங்கள் வாழ்வை ஒவ்வொரு ஈழத்தமிழரும் தாயகத்திலும் உலகெங்கும் அமைத்துக் கொண்டால் ஈழத்தமிழரின் இறைமையை இல்லாதொழிக்க ஈழத்தமிழரையே இல்லாதொழிக்கும் சிறிலங்காவின் இனஅழிப்பு ஆட்சியில் இருந்து ஈழத்தமிழர்களை விடுவிப்பது பெரிய விடயமல்ல என்பதை இலக்கு இம்மாவீரர் மாதத்தில் நினைவூட்ட விரும்புகிறது. அதே வேளை பலஸ்தீனிய மக்களுக்கான தன்னாட்சியை உலகு ஏற்று அவர்கள் மேலான இஸ்ரேயலின் இனஅழிப்பை முடிவுக்கு கொண்டு வர வேண்டுமென்றும் இலக்கு வலியுறுத்திக் கூறவிரும்புகிறது.

**ஆசிரியர்**

# திருப்பு முனையில் தமிழரசு!

தமிழரசுக் கட்சி இப்போது முக்கியமான ஒரு திருப்புமுனையில் நிற்கிறது. கட்சியின் தேசிய மாநாடு ஜனவரியில் நடைபெறப்போகின்றது. மாவைதான் தலைமைப் பதவியைத் தொடரப்



## பதவி துறப்பாரா சம்பந்தன்?



அகிலன்

போகின்றாரா அல்லது தலைவர் பதவிக்கு புதிய இரத்தம் பாய்ச்சப்படுமா என்ற கேள்வியுடன் தான் இந்த மாநாட்டை அனைவரும் எதிர்பார்க்கின்றார்கள். பழைய தலைமைகள் மீதான அதிருப்திதான் இதற்கு காரணம். இதேவேளையில், சம்பந்தனின் திருகோணமலை மாவட்ட எம்.பி. பதவி இப்போது சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கின்றது.

இந்த இரண்டும் தமிழர் அரசியலுடன் சம்பந்தப்பட்ட முக்கியமான விடயங்களாக இருப்பதால் அவற்றில் சம்பந்தன் விவகாரத்தை இந்த வாரம் பார்ப்போம்.

சம்பந்தனிடம் இப்போதிருப்பது எம்.பி. பதவி ஒன்றுதான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவி, கூட்டமைப்பில் இருந்த பங்காளிக் கட்சிகள் தனியாகச் சென்றதால் இல்லாமல் போய்விட்டது. தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவி மாவை சேனாதிராஜாவிடம் போய்விட்டது. தமிழரசுத் தலைமைப் பதவியை சேனாதியிடம் கொடுக்கும் போது, கூட்டமைப்பின் தலைமைப் பதவி தன்னிடம் இருப்பதாக அவர் திருப்திப்பட்டுக்கொண்டார்.

இப்போது தலைமைப் பதவிகள் எதுவும் இல்லாத போதிலும், அவரது அனுபவம், ஆற்றல் என்பவற்றின் அடிப்படையில் தமிழரசுக் கட்சியின் "பெருந் தலைவர்" என அவர் ஆதரவாளர்களால் போற்றப்படுகின்றார். அந்த பெருந்தலைவரின் அரசியல் "முதிர்ச்சியை" இப்போது கேலிக்குரிய தாக்கியிருக்கின்றார் சுமந்திரன்.

### சுமந்திரன் குற்றச்சாட்டு

"பெருந்தலைவரை" நோக்கி கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் இப்போது சுட்டுவிரலை நீட்டி குற்றச்சாட்டை முன்வைத்தமைதான் தமிழ் அரசியல் களத்தில் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது. கட்சிக்குள் சுமந்திரனுக்கு சார்பாகவும், எதிராகவும் கருத்துக்கள் எதிரொலிக்கின்றன. இந்தப் பின்னணியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவின் கூட்டத்திலும் இந்தப் பிரச்சினை எதிரொலித்திருக்கின்றது.

வவுனியாவில் இடம்பெற்ற மத்திய குழுவின் கூட்டத்தின் போது, சம்பந்தன் பதவி விலக வேண்டும் என சுமந்திரன் பகிரங்கமாகத் தெரிவித்த கருத்து தொடர்பில் அவர் விளக்கமளிக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. தலைவர் அனுமதி வழங்கினால் அதற்கான பதிலைத் தருவதற்கு தான் தயாராக இருப்பதாக சுமந்திரன் தெரிவித்தார். கூட்டத்துக்குத் தலைமைதாங்கிய மாவை சேனாதிராஜாவும், பதிலளிக்குமாறு சுமந்திரனிடம் தெரிவித்தார்.

2020 தேர்தலுக்கு முன்னர் தேர்தல் அரசியலிலிருந்து ஒதுங்கும் முடிவை திருமலையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் சம்பந்தன் அறிவித்தார். ஆனால், திருமலை மக்கள் அதனை ஏற்கவில்லை. அதனால், தனது முடிவை சம்பந்தன் மீள்பரிசீலனை செய்தார். அதன்போது அவர் இரண்டு நிபந்தனைகளை விதித்தார். ஒன்று கட்சியின் முதலாவது தேசியப் பட்டியல் உறுப்புரிமையை குகதாசனுக்கு வழங்குவதெனவும், இரண்டாவதாக ஒரு வருடத்துக்கு மட்டுமே தான் பதவியிலிருப்பேன் என்பதும்தான் அவரது நிபந்தனை.

### நிறைவேறாத நிபந்தனைகள்

2022 இல் நடைபெற்ற மத்திய செயற்குழுக்கூட்டத்தில் சம்பந்தனின் நிபந்தனைகள் குறித்து ஆராயப்பட்டது. ஒரு வருடமாகியும் அவர் பதவி துறக்காதது தொடர்பில் அவருக்கு நினைவுபடுத்துவது என ஒரு குழுவை சம்பந்தனிடம் அனுப்ப தீர்மானிக்கப்பட்டது. மாவையும், சுமந்திரனும் இந்தக் குழுவில் இருந்தார்கள். இவர்கள் திருமலை சென்று சம்பந்தனுடன் பேசிய போது அவர் பதவியைத் துறக்க மறுத்தார். தமது நிலையைத் தெரிந்துதான் மக்கள் தனக்கு வாக்களித்தார்கள் என சம்மந்தன் தனது நிலைப்பாட்டை அப்போது நியாயப்படுத்தினார்.

இந்த நிலையில்தான் நியுஸ் பெஸ்ட் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கருத்து கேட்ட போது, சம்பந்தன் பதவி துறக்க வேண்டும் என்ற கருத்தை சுமந்திரன் முன்வைத்தார்.

தமிழரசுக் கட்சி மத்திய குழுவில் சுமந்திரன் தெரிவித்த மற்றொரு கருத்தும் மிகவும் முக்கியமானது என்பதால் இலக்கு வாசகர்களுக்காக அதனையும் இங்கு தருகிறோம். "சம்பந்தன் ஐயா தனது நற்பெயரைப் பாதுகாப்பதாக இருந்தால், பதவியிலிருந்து விலகுவதோடு அவர் கொழும்பில் வசிக்கும் எதிர்க் கட்சித் தலைவருக்குச் சொந்தமான வீட்டை மீண்டும் கையளிக்க வேண்டும். அத்துடன் சம்பந்தன் பதவி விலகுவதானது, பாராளுமன்ற மற்றும் தேசிய மட்ட செயற்பாடுகளுக்கும், திருமலை மாவட்டத்துக்கும் நன்மையையே கிடைத்திருக்கும்" என்று சுமந்திரன் தெரிவித்தார்.

### சம்பந்தன் அதிருப்தி

சுமந்திரன் என்னதான் விளக்கம் கொடுத்தாலும் இதற்குப் பின்னால் ஒரு அரசியல் நகர்வு உள்ளது. சுமந்திரன் தனியோட்டம் ஓடுகிறார் என்ற அதிருப்தியை தனக்கு நெருக்கமான சிலரிடம் சம்பந்தன் அண்மைக் காலத்தில் தெரிவித்திருந்தார். தன்னிடம் கலந்தாலோசிக்காமலேயே சில விடயங்களை சுமந்திரன் செய்திருப்பது சம்பந்தனுக்கு சீற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. தமிழரசின் அடுத்த தலைமைப் பதவியில் கண்வைத்து செயற்பட்ட சுமந்திரன், குகதாசனுடன் ஏற்படுத்தியிருந்த நெருக்கமும் சம்பந்தனை குழப்பியது.

பொதுத் தேர்தலின் போது திருமலை மாவட்டத்தில் சம்பந்தனுக்கு அடுத்ததாக வந்திருந்த குகதாசனுடன் நெருங்கிச் செயற்படுகின்றார் என்பது சம்பந்தனுக்கு சீற்றத்தை ஏற்படுத்தியமைக்கு காரணமாக உள்ளது. சம்பந்தன் பதவி துறந்தால் அந்த இடத்துக்கு வரவேண்டியவர் குகதாசன்தான். ஒரு வருடத்தில் அந்த பதவியைத் தருவதாக சம்பந்தன் வேறு வாக்களித்திருந்தார். அதனைவிட, தேசியப் பட்டியலில் முதலாம் இடத்தை தந்து மற்றொருவருக்கு அதனைக் கொடுத்ததும் குகதாசனுக்கு சம்பந்தன் மீது கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. சம்பந்தனை நேரில் சந்தித்து இவை தொடர்பாக குகதாசன் கேள்வியும் எழுப்பியிருந்தார்.

### சூதாட்டத்தில் குகதாசன்

இந்த இடத்தில் குகதாசன் குறித்த ஒரு சிறிய அறிமுகம். சென்னையில் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தில் பணியாற்றிய குகதாசன், பின்னர் கனடாவுக்கு குடிபெயர்ந்து அந்நாட்டு பிரஜாஉரிமையை பெற்றவர். தமிழரசுக் கட்சிக்கும், திருமலை மாவட்ட தமிழர்களுக்காகவும் பெருமளவு நிதியைச் செலவிட்டவர். கடந்த பொதுத் தேர்தலில் குகதாசனை களமிறக்கிவிட்டு தான் ஒதுங்கப்போவதாகவே சம்பந்தன் முதலில் தெரிவித்துவந்தார்.

இதனைநம்பிகனடாபிரஜாவுரிமையையும் குகதாசன் துறந்தார். ஆனால், தேர்தலுக்காக குகதாசன் பெருமளவு தொகையைச் செலவிடுவார் என்ற நம்பிக்கையில்தான், மக்கள் கேட்பதால், தானும் போட்டியிடப்போவதாக பின்னர் சம்பந்தன் அறிவித்தார். இதன்போது குகதாசனைச் சமாளிக்கத்தான் இரு நிபந்தனைகள் என்ற நாடகத்தை அரங்கேற்றினார்

சம்பந்தனை வெட்டிவிட்டு திருமலையின் எம்.பி.யாக குகதாசனைக் கொண்டுவந்தால் தமது தலைமைக்கான கனவு சாத்தியமாகும் என்பது சுமந்திரனின் கணிப்பு. தமிழரசுத் தலைமைக்காக தனக்கு சவால்விட முற்படும் சிறிதரனுக்கு கிளிநொச்சியில் மட்டும்தான் ஆதரவுள்ளது. ஆனால், தமிழரசுக்கு தலைமைதாங்க வேண்டுமானால், வடக்கு - கிழக்கில் ஆதரவு இருக்க வேண்டும். முதலில் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் அங்கீகாரம் அவசியம். குகதாசனைக் கொண்டுவருவது தன்னைப் பலப்படுத்தும் என சுமந்திரன் கணக்குப்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# வல்லாண்மைகளின் நிலாவில் நீர் இல்லையென்ற விண்வெளிக் கோட்பாட்டை தன்சிந்தனையைச் செயலாக்கி நிலாவில் நீர் உண்டென நிறுவிய விஞ்ஞானி மயில்சாமி அண்ணாத்துரை

- அன்னாரின் "பெரியாரும் அறிவியலும்" உரை தமிழ் மக்களுக்குச் சத்தியளிக்கிறது
- ஈழத்தமிழ் மக்களுக்குச் செயற்பாட்டுப்பலமளிக்கிறது

மூத்த அரசியல் ஆய்வாளர்
**சூ. யோ. பற்றிமாகரன்**

அமெரிக்க இரஸ்ய விண்வெளி ஆய்வில் நிலவில் நீர் இல்லை என்ற நிலைப்பாடு நீல் ஆம்ஸ்ரோங் நிலவில் தரைஇறங்கிய பொழுது கொண்டு வந்த கற்கள் மணல் என்பவற்றின் சான்றாதாரங்களுடனும் 50 முதல் 70 வரை நிகழ்த்தப்பட்ட 99 நிலவுக்கான விண்கலங்களின் பயணங்கள் வழியாகவும் உறுதியாக்கப்பட்டது. ஆனால் இந்தியாவின் இஸ்ரோ விஞ்ஞானி மயில்சாமி அண்ணாத்துரை தான் வானத்தைப் பார்த்து இந்தப் பிரபஞ்சம் பல பில்லியன் கோடி கி.மீ தொலைவுக்குப் பரந்து விரிந்து இருக்கையில் நிலவு நமக்குத் தெளிவாகத் தெரியக்கூடிய வகையில் வெறும் 3 இலட்சம் கி. மீ. இல் தானே இருக்கிறது.



எனவே சாஸ்திரத்தில் பழமையான அறிவில் நிலவில் நீர் இல்லை என்று எழுதப்பட்டாலும் அந்த சாஸ்திரத்தை பழமை அறிவை மாற்றக் கூடிய வகையில் இதில் நீர் இருக்கலாம் என நான் எண்ணிய எண்ணத்தை அமெரிக்கா இரஸ்ய நிலவில் நீரில்லை என்ற கருத்துக்கு எதிர்கருத்தாக முன்வைத்து அதனை உறுதியுடன் பரிசோதனை ரீதியாக முயற்சித்து பார்ப்பதற்கு எடுத்த உழைப்பான வான்வெளி ஆய்வு முறைமைகளே இன்று நிலவில் நீர் உண்டு என்பதை அறிவியல் ரீதியாக நிறுவச் செய்துள்ளது எனச் சிங்கப்பூரில் "பெரியாரும் அறிவியலும்" என்ற மையப்பொருளில் பெரியார் சமூகசேவை மன்றத்தின் உமறுப்புலவர் தமிழ் மொழி நிலையத்தில் இம்மாதம் 5ம் திகதி உரை யாற்றுகையில் தெரிவித்தார். கூடவே தன்னுள் தனது வானத்துடனான நெருக்கமான தொடர்பால் ஏற்பட்ட நிலவில் நீர் இருக்கலாம் என்ற எண்ணத்தை முயற்சித்து பார்ப்பதற்கு "நிலவில் இறங்கு நீரைத் தேடு" என்ற அமெரிக்க ரஸ்ய செயன்முறைக்கு மாறாக " நீரைத் தேடு பின்னர் நிலவில் இறங்கு" என்ற கோட்பாட்டுடன் அவர்கள் அனுப்பிய ரோவரை அனுப்பாது சந்திரயான் 1 என்னும் வெறும் செயற்கைக் கோளை மட்டும் அனுப்பி முன்னர் மற்றைய கோள்கள் சுற்றிய இடமிருந்து வலமாக நிலவைச் சுற்றாது, நிலவை மேலிருந்து கீழாகச் சுற்றவைத்து தகவல்களைத் தரவுகளைப்பெற்று புதிய முறைமையைச் செயற்படுத்தியதால் நிலவில் நீர் உண்டு என்பது இன்று அறியப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

இப்படி முன்னர் உள்ள முறைமைக்குள்ளேயே சுழலாது புதிய முறைமைகளால் எண்ணங்களை நடைமுறைப்படுத்தும் சிந்தனை என்பது தன்னில் பெரியார் அவர்கள் "யார் சொல்லியிருந்தாலும் எங்கு படித்திருந்தாலும் நானே சொன்னாலும் உனது புத்திக்கும் பொது அறிவுக்கும் பொருந்தாத எதையும் நம்பாதே. உன் சாஸ்திரத்தை விட, உன் முன்னோரை விட, உன் வெங்காயம் விளக்குமாத்தை விட உன் அறிவு பெரியது. அதை சிந்தி" எனப் பெரியார் கூறிய வார்த்தைகள் தான் தன் நெஞ்சில் சிந்தித்துச் செயற்படும் தன்மையை உருவாக்கியது எனக் கூறியுள்ள விஞ்ஞானி மயில்சாமி அண்ணாத்துரை, திருக்குறளில் "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என வள்ளுவரும் தெளிவாகச் சொல்லியிருப்பதையும் தனது உரையில் சுட்டிக் காட்டினார்.

இன்று தமிழர்களிடை பொதுவாகவும் ஈழத்தமிழர்களிடை சிறப்பாகவும் உள்ள இன்றைய சமகாலத்துப் பிரச்சினைகளுக்கு எவ்விதம் தீர்வு காண வேண்டுமென்ற கேள்விக்கு விஞ்ஞானி மயில்சாமி அண்ணாத்துரை அவர்களின் இந்த உரை பல தெளிவுகளையும் வழிகாட்டல்களையும் நெறிப்படுத்தல்களையும் தந்துள்ளது.

தமிழர் ஒவ்வொருவரும் பழையன சிறந்தனவென்றோ புதியன தீயனவென்றோ முடிவுசெய்து வாழாது 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல்ல காலவகையினானே' என்ற தமிழிலக்கண நூலான நன்னூலின் இலக்கணப்படுத்தலைத் தம் வாழ்வின் இலக்கணமாக்கி பழமையில் மாளாது புதுமையில் மயங்காது சிந்தித்து சமகாலத்துக்கேற்ற கொள்கைகள் கோட்பாடுகளை உருவாக்கி உயர வேண்டும். இதனைத் தமிழரின் மெய்ப்பொருளியல் கோட்பாடாகவே "தொன் மையவாம் எனும் எவையும் நன்றாகா - இன்று தோன்றிய நூல் எனும் எவையும் தீதாகா" எனப் 13ம் நூற்றாண்டிலேயே, ஈழத்தில் யாழ்ப்பாண அரசு நிலவிய காலத்திலேயே தமிழகத்தில் 'சிவப்பிரகாசம்' என்னும் சைவ சித்தாந்த மெய்ப்பொருள் நூலைத் தந்த உமாபதி சிவானார் தெளிவாகக் கூறித் தமிழர் தத்துவமாகவும் உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளார். எனவே காலத்துக்கேற்ற சிந்தனைகளை வளர்த்து சிந்தனையைச் செயற்படுத்துவதற்கான வழிமுறைகளைத் தோற்றுவித்து அதை நோக்கி ஆர்வமுடனும் அக்கறையுடனும் விடா முயற்சியுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுவதுதான் எடுத்த காரியம் வெற்றியாகும் நிலையைத் தோற்றுவிக்கும் எனத் தமிழர்களுக்குச் சத்தியளிக்கும் உரையாக இவ் உரையை விஞ்ஞானி மயில்சாமி அண்ணாத்துரை அமைத்துள்ளார். இது தனி மனித வாழ்வில் எண்ணத்தை வெற்றியாகச் செயற்படுத்துவதற்கான வழிமுறையாக உள்ளது.

ஆனால் ஈழத்தமிழர்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் தனிமனித சுதந்திரம் மறுக்கப்பட்டு அவர்கள் தமிழர்கள் என்ற இனத்துவத்தன்மைக்காகச் சிறிலங்காவால் இனஅழிப்புக்கு உள்ளாக்கப்படுகிற சமகால வரலாற்றை கடந்த அரைநூற்றாண்டுக்கு மேலாகக் கொண்டுள்ளனர். இந்நிலையில் அவர்களின் தாயகம் தேசியம் தன்னாட்சி என்ற உரிமைகளை அவர்களின் வரலாற்றுத் தாயகமான இலங்கையில் அவர்கள் தங்களுக்கு வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாகத் தொடர்ந்து வரும் இறைமையின் அடிப்படையில் பாதுகாப்பதன் மூலம் தமது அமைதி வாழ்வை உறுதிப்படுத்த வேண்டிய மக்களாக இன்றைய உலகில் உள்ளனர். இதற்கு ஈழத்தமிழர்கள் தங்கள் தனிப்பட்ட குடும்ப வாழ்வை மட்டுமல்ல சமூகமாக தேசஇனமாக தேசமாக ஒன்று பட்டு எழ வேண்டியது அவசியமாகிறது. இதனை ஒருங்கிணைப்பில் ஈடுபடு பவர்கள் அவரவரின் சுதந்திரத்தின் அடிப்படையில் அனுமதித்து உரையாடல்கள் வழி உரிய நேரத்தில் உரியது நடக்க அன்பு உறவாடல் மூலமான நட்பின் வழி நெறிப்படுத்தல் வேண்டும்.

ஈழத்தமிழர்கள் தேசமாக அவர்களின் தேசியத்தலைமையின் கீழ் 1978 முதல் 2009 வரை 31 ஆண்டுகள் இலங்கைத் தீவுக்குள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாகத் தொடர்ந்து வரும் இருதேச மக்களின் நாடு இலங்கை என்ற உண்மையின் அடிப்படையில் ஈழத்தமிழர்களின் உயிர்களையும் உடைமைகளையும் நாளாந்த வாழ்வையும் பாதுகாக்க ஈழத்தமிழ் மக்கள் தங்களுக்கான நடைமுறையரசை சீருடை அணிந்த முப்படைகள் சட்டவாக்க சட்ட அமுலாக்க அமைப்புக்கள் நிர்வாகம் என்ற ஒரு அரசாங்கத்துக்குரிய அத்தனை கட்டமைப்புக்களுடனும் சிறிலங்காவின் இன அழிப்பில் இருந்து தங்களைப்பாதுகாக்கும் ஆயுத எதிர்ப்புப் போராட்டத்தினையும் உள்ளடக்கி முன்னெடுத்து அதற்கான உலக அங்கீகாரத்தை வேண்டிநின்ற நிலையில் அந்த நடைமுறையரசு சிறிலங்காவால் அதன் நட்பாளர்களாக விளங்கிய அனைத்துலக வல்லாண்மை மற்றும் பிராந்திய வல்லாண்மை நாடுகளின் நேரடியானதும் மறைமுகமானதுமான அனைத்துலகத் தலையீட்டின் படைபல மற்றும் புலனாய்வு உதவிகளுடன் 2009 முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பில் 176000க்கு மேற்பட்ட ஈழத்தமிழர்களைத் தேசமாகவே இனப்படுகொலை செய்த இனஅழிப்பின் மூலம் செயற்பட முடியாது அனைத்துலகச் சட்டங்களுக்கு எதிரான மக்கள் மேலான யுத்தத்தின் மூலம் முடக்கப்பட்டது. எனவே தேசமாக எழுந்த ஈழத்தமிழர்கள் அந்தத் தேசத்தை மீள் உற்பத்தி செய்வதே இன்றைய தேசமாக எழுதலாக அமைய வேண்டும். ஆயினும் துப்பாக்கிகள் மௌனித்த நிலையில் சனநாயக வழிகளின் மூலம் தங்களின் பிரிக்கப்பட முடியாத தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளை உடைய மக்களாகத் தங்களை மறு உற்பத்தி செய்தல் ஈழத்தமிழர்களின் இன்றைய

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

நேர்காணல்

# சீன தூதுவரின் வடக்கு வருகையின் பின்னணியில் மூலோபாய திட்டம்?!



**சீனத் தூதுவர் வடபகுதிக்கு சர்ச்சைக்குரிய விஜயம் ஒன்றை இந்த வார முற்பகுதியில் மேற்கொண்டிருந்தார். யாழ்ப்பாணத்தில் அவர் தெரிவித்த கருத்துக்கள் அரசியலில் இப்போது பேசுபொருளாகியிருக்கின்றது. இந்தப் பின்னணியில் யாழ். நகரில் அவரைச் சந்தித்து பேச்சு நடத்திய சிவில் சமூகப் பிரதிநிதிகளில் ஒருவரான பொருளாதார ஆய்வாளர் செல்வின் மரியாம்பிள்ளை அவர்கள் சீனத் தூதுவர் விஜயத்தின் பின்னணி அவர்களுடைய மூலோபாயத் திட்டங்கள் குறித்து இந்த வாரம் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக் களம் நிகழ்வில் கலந்துகொண்டு தன்னுடைய கருத்துக்களை முன்வைத்தார். அதிலிருந்து முக்கியமான பகுதிகளை இலக்கு வாசகர்களுக்காக தருகின்றோம்.**

## ஆய்வாளர் செல்வின் மரியாம்பிள்ளை செவ்வி

**இலங்கைக்கான சீனத் தூதுவரின் வட பகுதிக்கான விஜயம் இப்போது தமிழ் அரசியலரங்கில் முக்கியமான பேசு பொருளாகியிருக்கின்றது. அவரை நீங்களும் சந்தித்திருந்தீர்கள். அவரது வருகை, மக்களுக்கு உதவித் திட்டங்களை வழங்குவது என்பன குறித்த உங்களுடைய பார்வை என்ன?**

சீன மக்கள் குடியரசின் தூதுவராக ஒருவர் இங்கு வரும்போது அவரை வெறுமனே ஒரு தூதுவராக நாம் இங்கு எதிர்கொள்வது கிடையாது. ஏனெனில் மக்களுக்கு அதில் தடுமாற்ற நிலை ஒன்றுள்ளது. சீனாவை நாம் எப்போதும் இந்தியாவின் ஒரு எதிரியாகத்தான் பார்ப்பது வழக்கம். அதனால், சீனத் தூதுவர் இங்கு வந்தது பல தரப்புக்களாலும் அவ்வாறே பார்க்கப்பட்டது.

சீனத் தூதுவரை சந்தித்த எட்டுப் பேரைக் கொண்ட பொதுமக்கள் குழுவில் ஒருவராக நானும் பங்குகொண்டிருந்தேன். அதன்போது நாம் வலியுறுத்திய ஒரு விடயம் - "எமக்கு அபிவிருத்தி வேண்டும். ஆனால், அந்த அபிவிருத்தியை தக்கவைப்பதற்கான அதிகாரம் எமக்குத் தேவை. அந்த அபிவிருத்தி தொடர்பான தீர்மானத்தைக் கூட நாம் எடுக்க முடியாதவர்களாகவே இருக்கிறோம். அதனால், சீன தன்னுடைய நல்லெண்ணத்தை ஆட்சியாளர்கள் மீது பிரயோகித்து, எமது பிரச்சினைக்கான தீர்வு விடயத்தை துரிதப்படுத்த உதவ வேண்டும்" என்று கேட்டுக்கொண்டோம்.

ஆனால், சீனாவைப் பொறுத்தவரையில் தாங்கள் உள்நாட்டு விடயங்களில் சம்பந்தப்படுவதில்லை என்றும், நாம் அரசு - அரசு உறவைத்தான் பராமரிப்பதாகவும் தெரிவித்தார். அவர்கள் இன்னும் தமது நிலைப்பாட்டிலிருந்து மாறவில்லை. அவர்கள் என்ன நினைக்கின்றார்கள் என்றால், பொருளாதார ரீதியாக நலிவடைந்திருக்கும் வட, கிழக்குக்குள் சிறு சிறு பொருளாதாரத் திட்டங்களைச் செய்வதன் மூலமாக மக்களை ஏதோவொரு வகையில் கவர்ந்திழுக்க முடியுமா என்ற பார்வைதான் அவர்களிடம் உள்ளது. தெற்கில் பாரிய முதலீடுகளைச் செய்வதைப் போல வடக்கில் செய்வதற்கு அவர்கள் முன் வருவதில்லை. நயவஞ்சகமான வேலைத் திட்டங்களைத்தான் இங்கு செய்வதற்கு அவர்கள் முற்படுகின்றார்கள் போன்ற ஒரு தோற்றம்தான் இருந்தது.

அத்துடன் பல்கலைக்கழகங்கள் போன்ற நிறுவனங்களுடன் தமது உறவுகளை எவ்வாறு வலுப்படுத்தலாம், எவ்வாறான ஒப்பந்தங்களைச் செய்யலாம் என்பவற்றில்தான் அதிகளவுக்கு அக்கறை காட்டுகின்றார்கள். யாழ். பல்கலைக்கழகத்தில் அவர்கள் செய்வதற்கு முயற்சித்த வேலைத் திட்டம் வெற்றிபெறாததை யிட்டு அவர்கள் மிகுந்த கவலையும் விரக்தியும டைந்திருக்கின்றார்கள். அதற்கான காரணத்தை கூட அறிய முற்பட்டார்கள். மக்களுக்கு பயனளிக்கக்கூடிய வேலைத் திட்டங்கள் என்பவற்றைவிட, ஜனரஞ்சக வேலைத் திட்டங்கள் மூலமாக மக்களைக் கவரலாமா என்ற பார்வைதான் அவர்களிடம் இருப்பதை எம்மால் உணர முடிந்தது.

**மக்களைக் கவர்வதற்கான வேலைத் திட்டங்களை அவர்கள் செய்வதாகக் கூறுகின்றீர்கள். இதற்கான அவர்களுடைய மூலோபாயம் அல்லது தேவை என்ன?**

சீனா தொடர்பாக தமிழ் மக்கள் கொண்டிருக்கும் கருத்தை எவ்வாறு மாற்றலாம் என்பதைத்தான் அவர்கள் பார்க்கின்றார்கள். தமக்குச் சார்பான ஒரு அபிப்பிராயத்தை எவ்வாறு கட்டியெழுப்ப முடியும் என்பதை அவர்கள் பார்க்கின்றார்கள். இந்தியாவுக்கும் எமக்கும் இடையில் கலை, கலாசாரம், பண்பாடு போன்ற துறைகளில் நெருக்கமான உறவு இருக்கின்றது. அதேவேளையில் எமது உரிமை சார்ந்த விடயத்தில் இந்தியாவுக்கு முக்கியமானதொரு கடப்பாடும் இருக்கின்றது. எனவே இந்தியாவுக்கு சங்கடமான எந்தவிதமான முடிவையும் நாம் எடுக்க மாட்டோம். அது சீனத் தூதுவருக்கு தெளிவாகச் சொல்லப்பட்டது. அதனை அவர்கள் தெளிவாகப் புரிந்துகொண்டதாகவும் சொன்னார்கள்.

**அவர்கள் முதலீடுகள் தொடர்பாகவும் பேசியிருந்தார்கள். குறிப்பாக, சீனத் தொழிலதிபர்கள் வடபகுதியில் முதலீடு செய்வதில் ஆர்வமாக இருப்பதாகச் சொல்லியிருந்தார்கள். எவ்வாறான திட்டங்களை அவர்கள் மனதில் வைத்திருக்கின்றார்கள் என்பதை உங்களால் அறிய முடிந்ததா?**

ஆம். தமது முதலீட்டாளர்கள் அவ்வாறான ஒரு ஆர்வத்தைக் கொண்டிருப்பதாக அவர்கள் சொன்னார்கள். ஆனால், சீனாவைப் பொறுத்தவரையில், என்ன முதலீடாக இருந்தாலும் தாம் அதில் நேரடியாகச் சம்பந்தப்பட வேண்டும் என்பதைத்தான் அவர்கள் விரும்புவார்கள். இதில் பல கேள்விகள் எழும். உண்மையில் அவர்கள் வந்த நோக்கத்துடன் செயற்படுகின்றார்களா அல்லது வேறு நோக்கங்களையும் இணைத்துச் செயற்படுகின்றார்களா என்ற கேள்வி வரும் போது சிக்கல் வரும். எனவே, அந்த இடத்தில் நாங்கள் மௌனமாக இருந்தோம்.

அதேவேளையில், எமது உள்ளூர் தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்துங்கள் என்ற கோரிக்கையை நாம் அவர்களிடம் முன் வைத்தோம். அதற்கு பின்னர் உங்களைப் பங்காளராக்குவது தொடர்பில் ஆராயலாம் எனக் கூறினோம்.

**சீனாவின் ஆய்வுக் கப்பல் ஒன்று இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி இலங்கை வந்து ஆய்வுகளை மேற்கொண்டு சென்றிருக்கின்றது. இன்னொரு கப்பலும் அடுத்த வருட முற்பகுதியில் வரவிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. இந்தியாவின் கவலைகளையும் பொருட்படுத்தாமல் இந்தக் கப்பல்களுக்கு இலங்கை தொடர்ந்தும் அனுமதி வழங்குவதன் பின்னணி என்ன?**

இலங்கையின் நிலைமை 'கடன்பட்டார் நெஞ்சம் போல கலங்கினான் இலங்கை வேந்தன்' என்ற நிலைதான். இலங்கை பல நாடுகளிடம் கடன்பட்டுவிட்டது. அதனால், அவர்கள் சொல்வதற்கேற்றவாறு தான் நடக்க வேண்டும். இலங்கை விரும்பியவாறு செயற்படுவதற்கென இனிமேல் எதுவும் இல்லை. அதனால், சீனக் கப்பல்கள் தொடர்ந்து வரும். பல்வேறு நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளைச் செய்து தாம் தொடர்ந்தும் வருவதற்கான காரணங்களை அவர்கள் உருவாக்கிக்கொண்டுள்ளார்கள். இவற்றைப் பயன்படுத்தி அவர்களது கப்பல்கள் வந்து கொண்டுதான் இருக்கும். இலங்கையினால் அதனைத் தடுக்க முடியாமல்தான் இருக்கும்.

**வடக்கில் அமைக்கப்பட்டுள்ள கடலட்டைப் பண்ணைகளின் பின்னணியில் அரசியல் - புவியியல் சார்ந்த மூலோபாய நோக்கங்கள் இருப்பதாக நீங்கள் கருதுகின்றீர்களா?**

என்னுடைய அறிவுக்கு எட்டிய வகையில், இதில் சீனாவின் அரசியல் புவியியல் சார்ந்த விடயங்கள் இருப்பதாக உணரமுடியவில்லை. குறுகிய காலத்துக்குள் பெரிய வருமானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எமது பேராசைத் தனத்தை அவர்கள் தமக்கான வாய்ப்பாகப் பயன்படுத்தியிருக்கின்றார்கள். இதனால், சீனாவுக்குக் கிடைத்திருக்கின்ற ஒரேயொரு நன்மை என்னவென்று பார்த்தால் அது நாம் இங்கிருந்து அனுப்புகின்ற கடலட்டையாகத்தான் இருக்கும். ஆனால், அதனை ஆபிரிக்கா, நைஜீரியா உள்ளிட்ட பல நாடுகளிலிருந்து சீனா பெற்றுக்கொள்கின்றது. அந்த நாடுகளிலிருந்து பெருமளவுக்கு வரும்போது இலங்கையிலிருந்து சிறிய அளவுதான் சீனாவுக்கு கிடைக்கின்றது. அதனால், இதில் பெரிய பொருளாதார நலன்களும் சீனாவுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# சர்வதேசத்தில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளே கிழக்கினை பாதுகாக்கும்

மட்டு.நகரான்

“நல்லிணக்கம் சமாதானத்தை பேசிக்கொண்டு சர்வதேசத்தில் நிதியை திரட்டிக்கொண்டு இங்கு தமிழர்கள் தாயகத்தினை கபளீகரம் செய்கின்ற,நில உரிமையினை பறிக்கின்ற,தங்களது வருமானத்தை ஈட்டுகின்ற உரிமையினை பறிக்கின்ற செயற்பாட்டை இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துவருகின்றது.

வடகிழக்கு தமிழர் தாயகத்தில் பௌத்த விகாரைகளை அமைத்தல்,நிலங்களை அபகரித்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகள் ஊடாக தமிழர் தாயகத்தினை கபளீகரம் செய்து இந்த நாடு பௌத்த நாடு என்பதை இந்த நாடு நிரூபித்து நிற்கின்றது.எந்தவொரு நாடு எந்த கொள்கையில் பயணிக்கின்றதோ அதன் விளைவுகள்தான் அங்கே அடிமட்டத்தில் வெளிப்படுத்தி நிற்கின்றது.



திணைக்களங்கள் மகாவலி அபிவிருத்தி சபையாகட்டும் அனைத்து கட்டமைப்புகளும் சிங்கள பௌத்த பேரினவாத அரசுகளினாலேயே இயக்கப்படுகின்றன.இவற்றின் பேரிலேயெ அபகரிப்புகள், ஆக்கிரமிப்புகள் நடைபெறுகின்றன.இதற்கு அவர்களுக்கு பக்கபலமாக பாதுகாப்பு படையினர் இராப்பகலாக இணைந்திருக்கின்றனர். நீதியை நிலைநாட்ட வேண்டிய பொலிஸார் நீதிக்கு விரோமாக நடக்கின்றனர். சிங்கள பிக்கு ஒருவர் தமிழர்களை வெட்டிக்கொல்வேன்” என அடாவடியாக சொல்லிக்கொண்டிருக்கும்போது அவருக்கு எதிராக இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவுமில்லை,கைதுசெய்யப்படவுமில்லை.

ஆனால் வடகிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து அமைதியான முறையிலே கால்நடைபண்ணையாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து வந்திருக்கக்கூடிய சூழ்நிலையிலே அவர்களை வீதியில் வழிமறித்து அடாவடியாக இலங்கை பொலிஸார் ஒரு பயங்கரவாத செயற்பாட்டை முன்னெடுத்திருந்தனர். தெற்கிலே ஒரு நீதி வடகிழக்கிலே ஒரு நீதி, சிங்களவர்களுக்கு ஒரு நீதி,தமிழர்களுக்கு ஒரு நீதி என்பது வெளிப்படையாக இந்த நாட்டை துண்டாடியுள்ளது.

இந்த விதத்தில் நாங்கள் இவற்றினை பொறுத்துக்கொண்டிருக்கமுடியாது என அண்மையில் மட்டக்களப்பில் கால்நடை பண்ணையாளர்களின் போராட்டத்தில் கலந்துகொண்ட அருட்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்திருந்தார்.

மட்டக்களப்பில் கடந்த 57நாட்களையும் தாண்டிய வகையில் கால்நடை பண்ணையாளர்களின் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.இந்த போராட்டத்தினை அடக்கியொடுக்குவதற்கு பல்வேறு வகையான யுக்திகள் கையாளப்பட்டுவருகின்றன.கிழக்கில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களுக்கான ஆதரவு தளத்தினை இல்லாமல்செய்து அவர்களின் போராட்டத்தினை மழுங்கடிப்பு செய்வதற்கான மிகவும் திட்டமிட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்னறன.



குறிப்பாக இன்று மயிலத்தமடுவில் பொலிஸ் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஒரு புறம் பண்ணையாளர்களின் தொடர்ச்சியான போராட்டங்கள்,பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டங்கள், தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் அழுத்தங்கள் மற்றும் பல்வேறு வகையான செயற்பாடுகள் காரணமாக குறித்த பொலிஸ் நிலையம் அமைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இன்று இந்த பொலிஸ் நிலையம் என்ன நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதோ அந்த நோக்கத்தினை செயற்படுத்தாமல் அங்குள்ள அத்துமீறிய சிங்கள பயிர்ச்செய்கையாளர்களுக்கு ஆதரவான போக்கினை ஆரம்பித்துள்ளதாக தெரியவருகின்றது.

குறிப்பாக இந்த பொலிஸ் காவல் நிலையம் மயிலத்தமடுவில் அமைத்தது தமிழர்களையும் சர்வதேச சமூகத்தினையும் அரசாங்கத்திற்கு வால்பிடிக்கும் அரசின் கைக்கூலிகளையும் ஏமாற்றுவதற்கான செயற்பாடு என்பது தற்போது புலனாகிவருகின்றது.



இன்றைய தினம் மயிலத்தமடு, மாதவனையில் உள்ள கால்நடை பண்ணையாளர்களின் கூடாரங்களுக்கு சென்ற மயிலத்தமடுவில் உள்ள பொலிஸார் அங்குள்ளவர்களின் விபரங்களை கோரியுள்ளதுடன் அவர்களின் அடையாள அட்டையின் பிரதியையும் கோரியுள்ளனர். அத்துடன் அங்குள்ள கால்நடை களை வெளியில் நடமாடவிடாமல் அடைத்துவைக்கு மாறும் அங்குள்ள சட்ட விரோத பயிர்ச்செய்கையாளர்களுக்கு கால்நடைகளால் தொந்தரவு ஏற்படுவதாகவும் பொலிஸாரினால் கூறப்பட்டுள்ளது.அவ்வாறானால் அங்குள்ள சட்ட விரோத குடியேற்றவாசிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கா அங்கு பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டது என்ற கேள்வியை இன்று அப்பகுதி கால்நடை பண்ணையாளர்கள் கேட்கின்றனர்.

சட்ட விரோத குடியேற்றக்காரர்களை அப்புறப்படுத்தி அங்கு கால்நடை பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரையினை ஒப்படைக்க வேண்டிய பொலிஸார் இன்று சட்ட விரோத குடியேற்றக்காரர்களுக்கு முழு ஆதரவு வழங்கும் பணிகளை முன்னெடுத்துள்ளனர்.அண்மைக்காலமாக மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் திணைக்களத்தின் செயற்பாடுகளும் அவ்வாறான நிலையிலேயே உள்ளது.

அண்மையில் ஜனாதிபதி மட்டக்களப்பு விஜயம் செய்தபோது தமது கால்நடை பண்ணைகளுக்குரிய காணிகளை மீட்டுத் தருமாறு அமைதியான முறையில் கால்நடை பண்ணையாளர்களும் பொது அமைப்புகளும் போராட்டம் நடத்தியிருந்தன. இந்த போராட்டத்தின்போது அங்கு பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டு அமைதியான முறையில் போராட்டம் நடாத்தியவர்களை உணர்ச்சிவசப்படவைத்து போராட்டத்தினை உக்கிரமடையச்செய்து இன்று அங்கு போராட்டம் நடாத்தியவர்களுக்கும் அந்த போராட்டத்தில் செய்தி சேகரிக்கச்சென்றவர்களுக்கும் எதிராக பொலிஸார் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

ஆனால் அதே தினத்தில் மட்டக்களப்பு நகரில் ஜனாதிபதியின் கட்டவிட்டுக்கு தும்புத்தடியினால் அடித்து பொலிஸாரை தாக்கியவாறு போராட்டம் நடாத்திய அத்துமீறிய குடியேற்றவாசிகளுக்கும்அம்பிட்டியசுமனரத்னதேரருக்கும் எந்தவித வழக்கும் தாக்கல்செய்யப்படவுமில்லை,

அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை.அன்றைய தினம் பொலிஸ் அதிகாரியின் தொப்பியை கழற்றியெறிந்தும் பொலிஸாரின் சின்னங்களை கட்ட முற்பட்டும் பொலிஸார் தரக்குறைவாக பேசியும் போராட்டம் நடாத்திய பிக்குவிற்கு எதிராகவும் எந்த நடவடிக்கையும் இல்லை.ஆனால் தமது நில உரிமையினையும் தமது பறிக்கப்பட்ட காணி கோரி அமைதியான முறையில் போராட்டம் நடாத்தியவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்றுதான் கடந்த 02ஆம் திகதி கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் அமைதியான போராட்டம் முன்னெடுத்தபோது அங்கு எந்தவிதமான பொலிஸ் பிரசன்னமும் இல்லாமல் அவர்களது போராட்டத்திற்கு எந்த இடையூறும் இல்லாமல்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.வந்தாறுமூலை பல்கலைக்கழகத்திலிருந்து சித்தாண்டி வரையில் மாணவர்கள் பேரணியாக வந்தபோதும் எந்தவித செயற்பாடுகளையும் முன்னெடுக்காத பொலிஸார் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம் முன்னெடுக்கவந்தபோது அதனை தடுப்பதற்கு முயற்சிகள் எடுத்தது ஏன் என்ற கேள்வி இங்கு எழுந்துள்ளது.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம் நடாத்துவதற்கு முந்தைய தினம் குறித்த போராட்டத்திற்கு தடைவிதிக்குமாறு ஏறாவூர் நீதவான் நீதிமன்றில் சந்திவெளி பொலிஸாரினால் கோரப்பட்ட நிலையில் போராடும் ஜனநாயக உரிமையினை யாரும் மறுக்க முடியாது என நீதிமன்றம் தடைவிதிப்பதற்கு மறுப்பு தெரிவித்திருந்த நிலையில் மறுநாள் பல்கலைக்கழக மாணவர்கள் சித்தாண்டிக்கு

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# விருத்தி செய்யப்பட வேண்டிய சமூகநலன் வசதிகள்

துரைசாமி நடராஜா

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நாட்டின் தேசிய வருமானத்தில் காத்திரமான பங்களிப்பினை வழங்கி தேசத்தின் முதுகெலும்பாக இருந்து வருகின்றனர். எனினும் இவர்களின் நலனோம்பு நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கமோ அல்லது கம்பனியினரோ எந்தளவு கரிசனையுடன் செயற்படுகின்றார்கள் என்பது கேள்விக்குரிய ஒரு விடயமாக உள்ளது.

தொடர்ச்சியாகவே அம்மக்களின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்ற நிலையில் இம்மக்கள் சொல்லொணா துயரங்களை அனுபவித்து வருகின்றனர். இந்நிலையில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான தொழில்சார் உரிமைகளையும் அவர்களுக்கான நலன்புரி விடயங்களையும் பாதுகாப்பதற்கு தனியானதொரு சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமானால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு தொழில் அமைச்சின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளதாக அறிய முடிகின்றது.



இது ஒரு சிறப்பம்சமாகும் என்பதோடு இதன் சாதக விளைவுகளை தொழிலாளர்கள் பெற்றுக் கொள்ள பேதங்களை மறந்து சகலரும் ஒன்றுபட்டு குரல்கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

19 ம் நூற்றாண்டில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இந்நாட்டிற்கு அழைத்துவரப்பட்டு மலைப்பாங்கான இடங்களில் குடியமர்த்தப்பட்டனர். ஆரம்பகாலத்தில் இம்மக்கள் பல்வேறு தரப்பினராலும் புறக்கணிக்கப்பட்ட ஒரு சமூகமாக இருந்ததோடு இம்சைகளுக்கும் உள்ளாகினர். மேலும் கூலிகள், கள்ளத்தோணிகள்,வடக்கத்தையார், தோட்டக்காட்டார், இந்தியாக்காரர் என்றெல்லாம் அழைக்கப்பட்டு அவமதிக்கப்பட்டுமுள்ளனர். எனினும் சமகாலத்தில் நிலைமைகள் மிகவும் வேகமாக மாறிக்கொண்டு வருகின்றன.

தமிழ்த் தொழிலாளர்களின் துயரங்களும், இன்னல்களும் சுரண்டல் கொடுமைகளும் துயரங்களாகிக் கொண்டிருக்கின்றபோதிலும் கூட, தோட்டத்தொழிலாளர் மத்தியில் நாம் இதுவரை கண்டிராத அளவிற்கு விழிப்பும், எழுச்சியும், உரிமை வேட்கையும் முன்னேற்றமும் அதிகரித்து வருவது கவனிக்கத்தக்கதென்று கலாநிதி க.அருணாசலம் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளமை நோக்கத்தக்கதாகும். இதுவொரு வரவேற்கத்தக்க விடயமாகும் என்பதனை மறுப்பதற்கில்லை.

பெருந்தோட்ட தொழிலாளர் இந்நாட்டில் குடியேற்றப்பட்ட ஆரம்ப காலங்களில் அவர்களுக்கான நலனோம்பு திட்டங்களில் உரிய கவனம் செலுத்தப்படவில்லை. அவர்களின் உழைப்பை உறிஞ்சுவதை மட்டுமே குறியாகக் கொண்டிருந்த நிர்வாகத்தினர் பல்வேறு உரிமை மீறல்கள் இடம்பெறுவதற்கும் காரணகர்த்தாவாக இருந்தனர். உழைப்பு என்ற ஒன்றைத்தவிர வேறெதுவும் அவர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படவில்லை. இதேவேளை ‘ தோட்ட மக்கள் தமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு முற்றுமுழுதாக தோட்ட முறைமையிலேயே தங்கி இருக்கும் நிலை அங்கு காணப்படுகின்றது.

வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் தோட்ட எல்லைக்குள்ளேயே தனியொரு அமைப்பின் கீழ் வழங்கப்படுவதால் இவை சுயதேவைகளை பூர்த்தி செய்யும் அலகுகளாக விளங்குகின்றன. இதன் காரணமாக அவற்றை பூரணத்துவ தன்மை கொண்ட அமைப்புகளென்று கருதுவது பொருத்தமானதேயாகும்.

வாழ்க்கையின் வேறுபட்ட மூன்று கூறுகளாகிய தொழில், வாழ்க்கை முறை, பொழுதுபோக்கு என்பவற்றுக்கு இடையிலான தடைகள் இங்கு உடைத்தெறியப்படுகின்றன. இதனால் இவை முற்றிலும் பூரணத்துவம் வாய்ந்தனவாக இல்லாதபோதும் அவ்வாறு கருதுவது ஏற்கக்கூடியதே ‘ என்று ஹொல்லப் என்ற அறிஞர் தெரிவிக்கின்றார்.

### தொழிற்சட்டங்கள்

தோட்டத் தொழிலாளர்களின் நலன்கருதி சுகாதார வசதிகள்,பிரசவ விடுதி,வீட்டுவசதி என்பன செய்துகொடுக்கப்பட்ட நிலையில் இவ்வசதிகள் குறைந்தமட்டத்திலேயே காணப்பட்டன. இதனால் போஷாக்கின்மை மற்றும் பல நோய் நொடிகளுக்கும் தொழிலாளர்கள் உள்ளானார்கள். சிசு மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களும் போஷாக்கின்மை தொடர்பில் அதிகரித்த பாதிப்பினை எதிர்நோக்கி இருந்தனர். இந்நிலையிலேயே தொழிலாளர்களின் நலன் பேணும் பல சேவைகளையும் உறுதிப்படுத்துவதற்கு சட்டங்கள் பலவும் உருவாக்கப்பட்டன.

தொழிற்சட்டங்களும் இதில் உள்ளடங்கும். இந்த வகையில் முதலாவது கட்டளைச் சட்டமாக 1841 ம் ஆண்டு 5 ஆம் இலக்கம் கொண்ட ‘கூலி மற்றும் சேவைகள் ஒப்பந்த கட்டளைச் ‘சட்டமானது விளங்குகின்றது. இக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கண்காணிமார்கள் என்று அறிமுகப்படுத்தப்பட்ட தோட்டத் தொழிலாளர்களை வழங்கும் முகவர்கள் மூலமாக வெள்ளை இன தோட்ட உரிமையாளர்களுக்கு அல்லது துரைமார்களுக்கு இந்தியாவிலிருந்து தொழிலாளர்களை கொண்டு வரக்கூடியதாக இருந்தது. 1958 ம் ஆண்டின் 15 ம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டம், 1980 ம் ஆண்டின் 46 ம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம் என்பனவும் தொழிற்சட்டங்களில் குறிப்பிடத்தக்கனவாக விளங்குகின்றன.

1865 ம் ஆண்டு சேவை ஒப்பந்த சட்டம் முக்கியத்துவம் மிக்கதாகும். வைத்தியசாலைகளில் இறப்போரின் வீதம் ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடுகையில் பெருந்தோட்ட சமூகத்தினரிடையே அதிகரித்து காணப்பட்டது. இந்நிலையில் சுகவீனமுற்றுள்ள காலப்பகுதியில் அவர்களுக்கு இருப்பிட வசதி,உணவு,வைத்திய வசதி போன்ற குறைந்தபட்ச வசதிகள் செய்து கொடுக்கப்படுவதை இச்சட்டம் வலியுறுத்தியது. 1984 ம் ஆண்டு 14 ம் இலக்கச் சட்டம் தொழிலாளர்களின் சமூக நலனிற்கு தொழில் வழங்குநரே பொறுப்பு என்பதனை வலியுறுத்தியது. தொழிலாளருக்கான மருத்துவ நலன் திட்டங்களை நிதிப்படுத்துவதற்கும்



முகாமை செய்வதற்கும் அரசாங்கமே பொறுப்பென தோட்டக் கம்பனிகள் வாதிட்டு வந்த நிலையில் 1880 ம் ஆண்டு 17 ம் இலக்க மருத்துவ தேவைகள் சட்டத்தின் கீழ் அரசாங்மே இப்பொறுப்பை ஏற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். 1912 ம் ஆண்டு 9 ம் 10 ம் இலக்க மருத்துவ உதவிச் சட்டங்கள் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் முக்கியத்துவம் வாய்ந்த உதவிச்சட்டங்களாக விளங்குகின்றன.

இச்சட்டம் முதன் முறையாக ஒரு வயதிற்குக் குறைந்த பிள்ளைகளின் முறையான பராமரிப்பு, போஷாக்கு என்பவற்றிற்கு தோட்ட முகாமையாளரே பொறுப்பு என விதித்தது. மேலும் தோட்டங்களில் காணப்படும் சுகாதார வசதிகளையும் தோட்ட மக்களுக்கான சமூகநலன் வசதிகளையும் அரசாங்க மாவட்ட வைத்திய அதிகாரிகள் மேற்பார்வை செய்வதற்கும் இச்சட்டம் வழிவகுத்தது. அத்தோடு தோட்டங்களில் மலசல கூடங்களை அமைப்பதற்கும், வடிகாலமைப்புக்களை திருத்துவதற்குமான சட்டவிதிகளை உருவாக்குவதற்கும் இது அனுமதியளித்தது.

1907 ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 8 ம் இலக்க ஆரம்ப கல்விச் சட்டம் தினமும் குறைந்தது இரண்டு மணி நேரமாவது பிள்ளைகளுக்கு ஆரம்பக்கல்வி புகட்டுவதை கட்டாயமாக்கியது. இதேவேளை 1920 ம் ஆண்டு கல்விச் சட்டம் தோட்டங்களில் ஆரம்பப் பள்ளிகள் நடத்தப்படுவதை கட்டாயமாக்கி இருந்தது. 1941 ம் ஆண்டு பிரசவ நன்மைகள் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதனால் சாதக விளைவுகளை ஓரளவு தொழிலாளர்கள் பெற்றுக் கொள்ள கூடியதாக இருந்தது.



1969 இல் தேசிய மரண விகிதம் 1000 இற்கு 8 ஆகவிருந்த நிலையில் பெருந்தோட்டத்தில் இது 12 ஆகக் காணப்பட்டது. 1982 இல் நுவரெலியா மாவட்டத்தில் பிரசவ மரண விகிதம் 1000 இற்கு 1.8 வீதமாக இருந்தது. 1985 ம் ஆண்டின் பிரசவ சலுகைகள் திருத்தச் சட்டம் பிரசவ சகாயங்கள் பலவற்றையும் பெற்றுக் கொடுத்தது. இச்சட்டம் பிரசவகாலத்தில் ஊதியத்துடன்கூடிய 12 வாரகால விடுமுறைக்கு வித்திட்டதோடு, கர்ப்பமுற்ற ஆறாம் மாதத்திலிருந்து அதிக உயரமற்ற இடங்களில் வேலை கோரும் உரிமையை கர்ப்பிணிகளுக்கும், குழந்தை காப்பகங்களின் அருகே வேலை கோரும் உரிமையை பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# காஸாவில் இஸ்ரேல் முன்னெடுத்து வரும் போரும் தமது நாட்டுக்கான ஆதரவு குறைந்து வருவதைப் புரிந்துகொள்ள முடியாத இஸ்ரேல் மக்களும்

## பகுதி 1

தமிழில்: **ஜெயந்திரன்**

கடந்த வியாழக்கிழமை, அமெரிக்காவின் பென்ரகனைப் போன்று *(Pentagon)* ரெல் அவிவிலுள்ள கிர்யா *(Kirya)* என்ற இஸ்ரேலின் பாதுகாப்பு தொடர்பான விவகாரங்களைக் கையாளும் கட்டடத்துக்கு வெளியே அமர்ந்திருந்து, ஒரு கட்டையில் சுற்றப்பட்டிருந்த மஞ்சள் நிறம் கொண்ட றிபணை துண்டு துண்டாக வெட்டி, அங்கே வழியால் போய்க்கொண்டிருந்தவர்களிடம் அவற்றைக் கொடுத்துக்கொண்டிருந்தார், பேலெட் *(Baled)*. ஹமாசினால் கடந்த மாதம் கடத்திச் செல்லப்பட்ட அண்ணளவாக 240 பணயக்கைதிகளை அந்த மஞ்சள் நிற றிபண்கள் அங்கு வருவோர் போவோருக்கு நினைவுபடுத்திக்கொண்டிருந்தன.



இந்த றிபண்களைக் கையளித்துக்கொண்டிருந்த பேலெட் இன் மனதில் ஒரு கேள்வி. அதாவது இஸ்ரேலுக்கு வெளியே வாழ்கின்ற மக்களும் பணயக்கைதிகள் தொடர்பாக இஸ்ரேலில் தாங்கள் அனுபவிக்கும் உணர்வுகளைப் புரிந்து கொள்கின்றார்களா? என்பதாகும்.

"மிகவும் தீவிரமான தாராளவாதக் கொள்கையைக் கொண்ட ஒருவனாகவே என்னை நான் கருதுகின்றேன். ஆனால் உலகின் பல்வேறு பாகங்களில் ஹமாசுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்கள் அதிகளவில் நடைபெறுவதைப் பார்க்கும் போது, எங்களது மிகச் சிக்கலான சூழ்நிலையை உண்மையில் உலகம் புரிந்துகொள்கின்றதா? என்ற கேள்வி எனக்குள்ளே எழுகிறது. எல்லோரும் இதனை ஒருதலைப்பட்சமாகவே பார்க்கிறார்கள். நீதியையும் அவர்கள் அப்படித்தான் பார்க்கிறார்கள். ஆனால் இது மிக எளிதாகப் புரிந்துகொள்ளக்கூடிய சூழ்நிலை இல்லை" என்று சிஎன்என் *(CNN)* ஊடகவியலாளரிடம் அவர் தெரிவித்தார்.



வெவ்வேறு நாடுகளின் அரசுகள் இந்த மிகச் சிக்கலான சூழலைப் புரிந்துகொள்கின்றன. ஆனால் அந்த நாடுகளில் வாழும் சாதாரண மக்கள் இதனைப் புரிந்துகொள்கின்றார்களா? என்பது சந்தேகம் தான் என அவர் மேலும் தெரிவித்தார்.

காஸாப் பிரதேசத்தில், இஸ்ரேல் மேற்கொண்டு வரும் குண்டுத்தாக்குதல்களின் காரணமாக, அப்பாவிப் பொதுமக்களின் இறப்பு மிகவும் அதிகமாக நிகழ்வதன் காரணமாக, உலகத் தலைவர்கள் பலர் இஸ்ரேல் மீது கடுமையான அழுத்தத்தைப் பிரயோகிக்கின்ற இந்த நேரத்தில், இலண்டன், வோஷிங்டன் டி.சி., பேளின், பாரிஸ், அம்மான், கைறோ ஆகிய பெருநகரங்களில் பாலஸ்தீனத்துக்கு ஆதரவான ஆர்ப்பாட்டங்களில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டிருக்கின்றனர். இந்த ஆர்ப்பாட்டங்கள் ஹமாசுக்கு ஆதரவாக நடை பெற வில்லை. மாறாக காஸாவில் உள்ள அப்பாவிப் பொதுமக்களுக்கு ஆதரவாகவே இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இஸ்ரேல் நாட்டில் வாழும் மக்கள் பலர் தற்போதைய சூழ்நிலையில் தமது நிலை சரியாகப் புரிந்துகொள்ளப்படாததையிட்டு விரக்தியடைந்திருக்கிறார்கள்.

'உலகம் எங்களைப் புரிந்துகொள்ளவில்லை' என்ற உணர்வு இஸ்ரேல் சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் உணரப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.



"பாதிக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் உலகம் எங்களைப் புரிந்துகொள்கின்றது. நாங்கள் பாதிக்கப்படும் போது, நாங்கள் கொல்லப்படும் போது, உலகம் எங்கள் மேல் அநுதாபத்தைக் காண்பிக்கின்றது. அதனை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால் எங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையை நாங்கள் முன்னெடுக்கும் போது உலகம் எங்களைப் புரிந்துகொள்வதாகத் தெரியவில்லை." என்று சீகல் இற்ஸஹக் *( Sigal Itzahak)* சிஎன்என் ஊடகத்துக்குத் தெரிவித்தார்.

யூத மறை தொடர்பாகப் பெண்களுக்காக நடத்தப்படுகின்ற ஒரு பாடசாலையில், ஆசிரியராகப் பணிபுரிகின்ற இற்ஸஹக், பேலெட் றிபண்களைக் கையளித்துக்கொண்டிருக்கின்ற கிர்யாவுக்கு வெளியேயுள்ள சதுக்கத்துக்கு தனது மாணவர்கள் சிலரை அழைத்துவந்திருந்தார்.

ஒக்ரோபர் 7ம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் நிகழ்த்திய தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், ஆதரவாளர்கள் போன்றவர்கள் ஒன்றுகூடுகின்ற இடமாக இந்தச் சதுக்கம் தற்போது மாற்றமடைந்திருக்கிறது.

காணாமல் ஆக்கப்பட்ட மக்கள் தொடர்பான சுவரொட்டிகளாலும், இறந்த மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் ஒளிப்படங்களாலும் மேற்குறிப்பிட்ட அரச கட்டடத் தொகுதி நிறைந்திருக்கிறது.

முகத்தில் புன்னகையுடன் காணப்படும் ஆண்கள், பெண்கள், சிறுபிள்ளைகள், குழந்தைகள், இராணுவச் சிப்பாய்கள் போன்றவர்களின் படங்களை, நிறையவே அங்கு பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. ஒரு சில சந்தர்ப்பங்களில் முழுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் ஒளிப்படங்களையும் அங்கே பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.

ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதலில், 1400க்கும் மேற்பட்ட எண்ணிக்கையான மக்கள் கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய பாதுகாப்புப் படை அறிவித்தது. ஏறக்குறை 240 பேர் கடத்திச் செல்லப்பட்டதாகவும், அவர்கள் ஹமாசாலும் ஏனையோராலும் காஸாப் பகுதிகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது. அமெரிக்காவைச் சேர்ந்த இரண்டு பெண்கள், இஸ்ரேலைச் சேர்ந்த இரண்டு பெண்கள் என, நான்கு பெண்கள் ஹமாசால் ஏற்கனவே விடுவிக்கப்பட்டிருக்கின்றனர். அதே நேரம் இஸ்ரேலின் ஒரு சிப்பாய் இஸ்ரேல் பாதுகாப்புப் படையால் மீட்கப்பட்டிருக்கிறார்.

"எங்களது நிலையில் இருக்கக்கூடிய உலகத்தின் வேறு ஒரு நாடு, தனது பாதுகாப்புக்காக இதை விட அதிகமான நடவடிக்கையை எடுக்கும். யாருமே அதைப் பற்றி எந்தவித கருத்தும் தெரிவிக்கமாட்டார்கள். யூத இனத்தைச் சேர்ந்த எங்கள் மீது தான் கண்டனங்கள் குவிந்துகொண்டிருக்கின்றன. அமைதியாக ஒரு நாட்டில் வாழ யூத இனத்தைச் சேர்ந்தவர்களால் இயலாமல் இருக்கிறது. உண்மையில் அமைதியாக வாழவே நாங்கள் விரும்புகிறோம். மன்னிக்க வேண்டும். இதை யாருமே புரிந்துகொள்வதாக எனக்குத் தெரியவில்லை" என்று இற்ஸஹக் மிகவும் கவலையான தொனியுடன் தெரிவித்தார்.

### நெத்தன்யாகு மீது திரும்பும் இஸ்ரேல் மக்களின் கோபம்



பாதிக்கப்பட்டவர்கள் மீது கிர்யா கட்டடத்துக்கு வெளியே, மக்கள் ஒத்துணர்வைக்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# மத்தியகிழக்கில்

## ஒரு பிராந்திய போர் உருவாகும் சூழ்நிலைகள் உருவாகின்றன

வேல்ஸ் இல் இருந்து **அருஸ்**

இஸ்ரேல் - பாலஸ்தீனப் போர் ஒரு மாதத்தை கடந்து நீண்டு செல்லும் நிலையில் அங்கு 10,000 இற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப் பட்டும், 26,000 இற்கு மேற்பட்டவர்கள் காய மடைந்துமுள்ளதுடன் உலகில் உள்ள 193 நாடுகளும் பார்த்திருக்க மிகப்பெரும் மனிதப் பேரவலம் ஒன்று அங்கு வாழும் 2 மில்லியன் மக்கள் மீது உலகின் மிகப்பெரும் ஜனநாயக நாடுகள் எனக்கூறிக்கொள்ளும் நாடுகளால் அரங் கேற்றப்படுகின்றன.

இந்த நிலையில் இஸ்ரேலிய படையினர் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர் காசா பகுதியை இரண்டாக பிரித்து ஊடறுப்பு தாக்குதல் ஒன்றை கடந்த வாரம் ஆரம்பித்திருந்தனர். வான் படையினரும், ஏவுகணைப் படையினரும் 30,000 தொன் வெடி குண்டுகளை அந்த சின்னம் சிறிய பகுதி மீது வீச மிகப்பெரும் படைவலுவுடன் இஸ்ரேல் படையினர் மேற்கொண்ட ஊடறுப்புத் தாக்குதல் 5 நாட்களின் பின்னர் வடக்கு காசாவின் மையப்பகுதியை அடைந்திருந்தது.

காசாவை இரண்டாக பிரித்த பின்னர் மேலும் பெயிற் லஹா மற்றும் பெயிற் ஹனோன் ஆகிய இரு முனைகளால் நகர்வதன் மூலம் வடக் கில் உள்ள ஹமாஸ் படையினரின் பலத்தை அழிப் பது தான் இந்த நடவடிக்கையின் திட்டம்.




ஆனால் சமர் அங்கு உக்கிரமாகவே இடம் பெற்று வருகின்றது. ஹமாசின் பல பதுங்கு குழிகளை அழித்துள்ளதாகவும், ஹமாசின் காசா பகுதிக்கான தலைவரின் பதுங்குகுழியை சுற்றி வளைத்துவிட்டதாகவும் இஸ்ரேல் கூறியபோதும் இந்த பத்தி எழுதப்படும் வரையில் அவர் கொல்லப்பட்டதாகவோ இல்லை ஹமாசினால் பிணைக்கைதிகளாக பிடிக்கப்பட்டவர்கள் விடு விக்கப்பட்டதாகவோ செய்திகள் இல்லை.

எனினும் மத்தியகிழக்கிற்கு சென்றுள்ள அமெரிக்காவின் புலனாய்வுத்துறையான சி.ஐ.ஏ யின் தலைவர் வில்லியம் பேர்ன்ஸ், இஸ்ரேலின் புலனாய்வு அமைப்பான மொசாட்டின் தலை வருடன் இணைந்து கட்டார் அரசுடன் பிணைக் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் பேச்சுக்களை மேற்கொண்டு வருகின்றார்.

அதேசமயம், கடந்த ஒரு மாதத்தில் 3 தடவைகள் இஸ்ரேலுக்கும், அரபு நாடுகளுக்கும் பயணம்மேற்கொண்டஅமெரிக்காவின்வெளிவிவ காரச் செயலாளர் அந்தோனி பிளிங்டன் காசாவில் இருந்து ஹமாசை அகற்றி வேறு ஒரு தரப்பை அதிகாரத்திற்கு கொண்டுவருவது தொடர்பில் அரபு நாடுகளுடன் பேசிவருகின்றார். ஆனால் எகிப்தும், துருக்கியும் அதனை ஆரம்பத்திலேயே நிராகரித்துவிட்டன.



பேச்சுகள் இடம்பெறும் அதேசமயம், களமுனையானது மிகவும் கடுமையானதாகவே இருக்கின்றது. தொடர் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. ஹமாசின் பல பதுங்குகுழிகளை தாம் கைப்பற்றியுள்ளதாகவும், பல ஆயுத உற்பத்தி நிலைகள் மற்றும் உந்துகணைகள் செலுத்தும் இடங்களை கைப்பற்றியதாக இஸ்ரேல் தெரிவித்து வருகின்றது.

அதேசமயம், தமது தொடர் தாக்குதல் களில் இஸ்ரேலிய படையினர் ஆள் மற்றும் படைக்கலங்களை இழந்துவருவதாக ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்பினர் தெரிவித்து வருகின்றனர்.

இஸ்ரேலிய தரப்பை பொறுத்தவரையில் கடந்த ஒக்டோபர் 7 ஆம் நாள் முதல் தற்போது வரையில் இடம்பெற்ற மோதல்களில் தமது தரப்பில்350 படையினரும், 59 காவல்துறையினரும், 10 புலனாய்வு அதிகாரிகளும் கொல்லப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் வடக்கு காசா பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் லெப். கேணல் தர அதிகாரி உட்பட பல இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டிருந்தனர். ஹமாஸ் தரப்பில் பல கட்டளை அதிகாரிகள் உட்பட பெருமளவானோர் கொல்லப்பட்டபோதும் அந்த அமைப்பினர் விபரங்களை வெளியிடவில்லை. அதேசமயம், தமது தரப்பில் 65 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப் பட்டதாக ஹிஸ்புல்லாக்கள் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம், கடந்த மாதம் 17 ஆம் நாளுக்கு பின்னர் ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள அமெரிக்க தளங்கள் மீது எதிர்ப்பு படையினர் ஏவுகணை மற்றும் ஆளில்லாத விமானங்கள் மூலம் மேற்கொண்டுவரும் தாக்குதல்களில் 56 படையினர் காயமடைந்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அதேசமயம், பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக தாக்குதலை ஆரம்பித்துள்ள யேமனின் ஹதீஸ் படையினர் நான்கு தடவைக்கு மேல் ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் மற்றும் ஏவுகணைகள் மூலமான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். பல ஏவுகணைகளை சவுதி அரேபியாவில் நிலைகொண்டுள்ள அமெரிக்க படையினர் சுட்டுவீழ்த்தியுள்ளதுடன், செங்கடலில் நிலை கொண்டுள்ள அமெரிக்காவின் கானி என்ற கப்பலில் உள்ள ஏவுகணைகள் மூலமும் யேமனின் ஏவுகணைகளை சுட்டுவீழ்த்தி இஸ்ரேலை பாது காத்து வருகின்றது அமெரிக்கா.

இந்த நிலையில் காசா பகுதிகளில் உளவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு இஸ்ரேலின் வான் தாக்குதல்களை நெறிப்படுத்திவந்த அமெரிக்கா வின் 32 மில்லியன் டொலர்கள் பெறுமதியான எம். கியூ-9 என்ற நவீன ஆளில்லாத தாக்குதல் மற்றும் உளவு விமானம், யேமனின் படை நிலைகள் தொடர்பானதகவல்களை அறியும் முகமாக யேமன் கடற்கரை பகுதியில் பறந்தபோது ரஸ்யாவின் Soviet 2K12 "Cube" என்ற ஏவுகணை மூலம் கடந்த புதன்கிழமை (8) யேமன் சுட்டுவீழ்த்தியுள்ளது.



மிகவும் நவீன சாதனங்களை கொண்ட இந்த விமானத்தை அண்மையில் கருங்கடல் பகுதியில் வைத்து தனது சு-27 விமானங்களின் மூலம் ரஸ்யா வீழ்த்தியிருந்தது. அதற்கு பின்னர் அமெரிக்க இழந்த இரண்டாவது விமானம் இது.

இந்த விமானம் வீழ்ந்ததை உறுதிப்படுத்தி யுள்ள அமெரிக்காவின் பாதுகாப்பு திணைக்களம், அது எந்த ஆயுதத்தால் சுட்டுவீழ்த்தப்பட்டது என்பது குறித்து தமக்கு தெரியவில்லை என தெரிவித்துள்ளது. 2007 ஆம் ஆண்டு பாவனைக்கு வந்த இந்த விமானம் 50,000 அடி உயரத்தில் பறக்கும் சக்தி கொண்டதுடன், 1,400 மைல் தூரவீச்சும் கொண்டது. தரையில் இருந்து கட்டுப்படுத்தப்படும் இந்த விமானம், செய்மதி தொடர்புகளையும் மேற்கொண்டு இலக்குகளை கண்டறியக்கூடியது.



ஈராக், சிரியாவில் உள்ள அமெரிக்கதளங்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் யேமன் படையினர் மேற்கொள்ளும் தாக்குதல்கள் எல்லாவற்றிற்கும் பின்னனியில் ஈரான் உள்ளதாக அமெரிக்கா குற்றம் சுமத்தி வருகின்றது.

அதாவது யேமன் படையினர் ஈரானின் புதிய ஆயுதங்களையே இஸ்ரேலுக்கு எதிரான கள முனைகளில் பயன்படுத்தி அதனை பரிசோதித்து வருவதாக ஐ.நாவுக்கான அமெரிக்காவின் முன் னாள் தூதுவர் Nikki Haley தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## விருத்தி செய்ய ... தொடர்ச்சி ...

**ஏட்டுச் சுரைக்காய்**

தொழிலாளர்களின் தொழில்சார் உரிமைகள் மற்றும் நலன்புரி விடயங்கள் என்பவற்றை பாதுகாக்கும் நோக்கில் சட்டங்கள் பல காணப்பட்டபோதும் பல சந்தர்ப்பங்களில் இச்சட்டங்களின் செயலிழந்த போக்கினையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஏட்டுச் சுரைக்காயாக இச்சட்டங்கள் முடக்கம் பெற்றுள்ள நிலையில் தொழிலாளர்கள் மழுங் கடிப்பிற்கு உள்ளாகின்றனர். கம்பனிகள் தோட்டங்களை பொறுப்பேற்றதன் பின்னர் தொழிலாளர்களின் தொழில் உரிமைகள் மற்றும் நலன்புரி விடயங்களில் கம்பனிகள் கரிசனை காட்டுவதில்லை என்ற மிகப்பெரும் குற்றச்சாட்டும் இருந்து வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

இந்நிலையில் பெருந்தோட்ட தொழி லாளர்களுக்கான தொழில்சார் உரிமைகளையும் அவர்களுக்கான நலன்புரி விடயங்களையும் பாதுகாப்பதற்கு தனியானதொரு சட்டம் இயற்றப்பட வேண்டுமென்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் யோசனை ஒன்றை முன்வைத்துள்ளார். இந்த யோசனைக்கு தொழில் அமைச்சின் ஒப்புதலும் கிடைக்கப் பெற்றுள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

இதற்கமைய இது தொடர்பான சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை நிறைவேற்றுவதற்கு தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவும் இணக்கம் தெரிவித் திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாக உள்ளது. இதேவேளை தொழில் சட்டத்துக்கு புறம்பாக மேலதிக சட்டமாகவே இச்சட்டம் அமுலுக்கு வருமென்றும் இது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைத்த அங்கீகாரமாகும் என்றும் இ.தொ.கா.வின் உபதலைவர் பாரத் அருள்சாமி தெரிவித்திருக்கின்றார். மேலும் கடந்த காலத்தில் கூட்டு ஒப்பந்தத்தின் ஊடாகவே நலன்புரி விடயங்கள் பாதுகாக்கப்பட்டன. எனினும் நலன்புரி விடயங்கள் முழுமையாக தொழிலாளர்களை சென்றடையவில்லை.

இந்நிலையில் தற்போது புதிய சட்டத் தின் ஊடாக தொழில் பாதுகாப்பு மற்றும் நலன்புரி விடயங்களைப் பாதுகாக்க வாய்ப்பு கிடைத்துள்ளது என்றும் பாரத் தெரிவித்துள் ளார். சட்டங்கள் இயற்றப்படுவது சிறப்பாகும் அதேவேளை அவற்றை உரியவாறு நடைமுறை படுத்தவும் சகலரும் அழுத்தம் கொடுப்பது அவசியமாகும்.

இந்நிலையில் 'தோட்டங்களில் உள்ள லயன் தொடர் அறைகளில் அல்லது வீடுகளில் குடியிருப்பதன் காரணமாகவே சமூகநலன் வசதிகளை ஏற்படுத்துவதில் பிரச்சினைகள் தோன்றுகின்றன. இவ்வீடுகள் குடியிருப் போருக்கே உரிமையாக்கப்பட்டு தோட்டக் குடியிருப்புகளும் கிராமக் குடியிருப்புக்களாக மாற்றம் பெறுமிடத்து, நாட்டின் ஏனைய துறைகளைப் போன்று இங்கும் சமூகநலன் வசதிகளை வழங்குவது சாத்தியமாகும்.

அத்துடன் இம்மக்களை இலகுவாக தேசிய நீரோட்டத்திற்குள் இணைக்கக் கூடியதாகவும் இருக்கும். தோட்ட மக்களுக்கு எதிர்காலத்தில் சிறந்த சமூகநலன் வசதிகளை ஏற்படுத்துவதற்கு இதுவே பொருத்தமான வழியுமாகும்' என்று பேராசிரியர் மு.சின்னத்தம்பி தனது கட்டுரையொன்றில் சுட்டிக்காட்டியுள்ளமையும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

• • •

## சர்வதேசத்தில் ... தொடர்ச்சி ...

அருகில் உள்ள முறுக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமுக்கு முன்பாகவிருந்து அமைதியான முறை யில் பேரணியை முன்னெடுத்திருந்தனர்.

அமைதியான முறையில் போக்குவரத்துக்கு எந்தவித இடையூறும் இல்லாமல் முன்னெடுக் கப்பட்ட போராட்டம் சித்தாண்டியை நெருங்கிய சந்தர்ப்பத்தில் அங்குவந்த சந்திவெளி பொலிஸார் போராட்டக்காரர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டபோது அங்கு மாணவர்கள் மத்தியில் சற்று குழப்பம் ஏற்படும் சூழ்நிலையிருந்தது.

எனினும் மாணவர்கள் குறித்த பேரணியை அமைதியான முறையில் மேற்கொண்டுபோராட் டம் நடைபெறும் இடத்திற்கு வருகைதந்து அங்கு போராட்டக்காரர்களுடன் இணைந்து வீதியில் போக்குவரத்து இடையுறு ஏற்படாமல் பொலிஸாரின் அறிவுறுத்தல்களை கடைப்பிடித்து போராட்டங்களை முன்னெடுத்தபோதும் அங்கு பொலிஸார் அச்சுறுத்தும் வகையிலேயே செயற்பட்டதை காணமுடிந்தது.

அப்பகுதியில் பெருமளவான கலகமடக் கும் பொலிஸார் குவிக்கப்பட்டு அங்கு போராட்டம் நடாத்துபவர்களை அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டபோதும் மாணவர்கள் பொறுமையாக மிகவும் அமைதியான போராட்டங்களை முன்னெடுத்தனர்.

இவ்வாறான நிலையில் அப்பகுதியில் குறித்த மாணவர்களினை போராட்ட இடத்தில் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெக் கப்பட்டபோதிலும் அப்பகுதியில் பெருமளவான ஊடகவியலாளர்களிருந்த காரணத்தினால் பொலி ஸார் கைதுசெய்யும் செயற்பாடுகளை தவிர்த்திருந்தனர்.

இந்த நிலையில் ஆர்ப்பாட்டம் நிறைவு பெற்ற நிலையில் அங்கிருந்து ஊடகவியலாளர்கள் கலைந்துசென்ற பின்னர் அவர்களை துரத்திச்சென்று சந்திவெளி பொலிஸார் மாணவர்களை கைது செய்துள்ளனர். அவர்களை கைதுசெய்து பொய் யான குற்றச்சாட்டுகளுடன் நீதிமன்றில் ஆஜர் படுத்தியிருந்தனர்.

பொலிஸாரின் இவ்வாறான செயற்பாடுகள் இந்த நாட்டில் தமிழ் மக்கள் பொலிஸ் மீதும் இலங்கையின் சட்டத்தின் மீதும் வைத்திருந்த நம்பிக்கையினை முற்றாக அழித்திருக்கின்றது. இலங்கையின் ஜனநாயக வரம்புகள் என்பது தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் வேறுபட்டது என்பதை இலங்கை காவல்துறை நிரூபித்துள்ளது.

இன்று புலம்பெயர் தேசத்தில் உள்ள மக்களிடமே கிழக்கின் இருப்பு தங்கியுள்ளது. சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்படும் அழுத் தங்களும் செயற்பாடுகளுமே கிழக்கினை பாது காக்கும் ஆயுதமாக மாறும் என்பது எங்களது நம்பிக்கையாகும். இன்று முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் முற்றிலுமாக மனித உரிமைகளுக்கே மாறானதாக மாறியிருக்கும்போது இந்த நாட்டில் தமிழ் மக்கள் எவ்வாறு நீதியைப்பெற்றுக்கொள்ளமுடியும் என்ற நிலை யுருவாகியுள்ளது.

இவற்றினை கருத்தில்கொண்டு செயற்பாடு கள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதே எமது கோரிக்கையாகவுள்ளது. மட்டக்களப்பில் மயிலத்தமடு, மாதவனையில் அத்துமீறிய குடியேற் றக்காரர்கள் அப்புறப்படுத்தப்பட்டு கால்நடை பண்ணையாளர்களுக்கு நீதி வழங்கப்படும் வரையில் எனது எழுத்துக்கள் என்பது அவர்கள் சார்ந்ததாகவேயிருக்கும்.

• • •

## மத்தியகிழக்கில்... தொடர்ச்சி ...

அதேசமயம், காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் ஆரம்பித்ததில் இருந்து தற்போது வரையில் 123 விமானங்களும், 7 கப்பல்களும் அமெரிக்காவின் 7,000 தொன் ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு இஸ்ரேலை வந்தடைந்துள்ளன. மேலும் 80,000 படையினரை லெபனான் எல்லைகளில் குவித்துள்ள இஸ்ரேல் தனது தாக்குதல் கப்பல்களையும் மத்தியதரைக்கடலுக்கு நகர்த்தியுள்ளது.

இஸ்ரேல்-பாலஸ்தீனப்போர் ஒரு பிராந்திய போராக மாற்றம் பெறுவதை தவிர்க்க அமெரிக்கா கடும் முயற்சிகளை மேற்கொண்டபோதும், தற் போது அது அமெரிக்காவின் கையை மீறிப்போகும் சந்தர்ப்பங்களே அதிகம் உள்ளது போன்று தெரி கின்றது.

## இந்திய ரோட்டரி ... தொடர்ச்சி ...

இவர்களுடன் திரு.T.R,தனசேகரன் - சென்னை சன் சிட்டி ரோட்டரி கழகம், இவ் நிகழ்ச்சி ஒருங்கி ணைப்பாளராக கடமையாற்றினார்.

"கல்வி சக்தி" திட்டத்தின் மூலம் பின் தங்கிய கிராமப் பகுதியில் கல்வி கற்கும் மாணவர்களின் கற்றல் திறனை மேம் படுத்துவதட்கு இணையம் மூலமாக சிறந்த ஆசிரியர்கள் பாடத்திட்டத்தை கற்பிப்பார்கள். சகல நிலயத்திட்கும் ஒரு இணைப்பாளர் கடமை யாற்றுவார்.

தற்சமயம் இந்தியாவில் 200 நிலையங்க ளும் இலங்கையில் 3 நிலையங்களும் செயல் படுகிறது. இதுவரை இச் செயல்பாட்டின் மூலம் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளார்கள். இதன் மூலம் திருகோணமலை மாவட்ட மாணவர்கள் நிச்சயம் பயன் பெறுவார்கள்.

## முள்ளிவாய்க்கால் ... தொடர்ச்சி ...

எனினும் இப்போது ரொட்டிகளை விட தண்ணீரே மிகப்பெரும் பிரச்சனையாக உள்ளது எங்கும் தண்ணீர் தண்ணீர் என்ற குரல்களே ஒலிக்கின்றன. அந்த பகுதிக்கு ஒரு தண்ணீர் குழாய் மூலமே நீர் விநியோகம் நடைபெறுகின்றது. 1.7 மில்லியன் மக் களுக்கு உணவுகளை தயாரிப்பதற்கு 86 பேக்கறிகளே இயங்குகின்றன என 193 நாடுகளை கொண்ட ஐ.நா உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற காணொளி மூலமான சந்திப்பில் வைற் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேசமயம், இஸ்ரேலில் இடம்பெறும் ஒரு மாத போரில் உக்ரைனில் இடம்பெறும் 620 நாள் போரைவிட அதிகளவான மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

அங்கு இடம்பெறும் போரில் இது வரையில் 10.328 பொதுமக்கள் கொல்லப் பட்டு ள்ளனர். அவர்களில் 4,237 சிறுவர்கள் மற்றும் 2,719 பெண்கள் ஆவார். மேலும் 26000 பேர் காயமடைந்துள்ளதுடன், 2300 பேர் காணாமல் போயுள்ளனர்.

## வடக்கில் முதலீடு ... தொடர்ச்சி ...

அமைக்கப்பட்டு இந்த உதவிப்பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டன.

வடக்கிற்கு சீன தூதுவர் பயணம் செய்வது இது இரண்டாவது தடவை. வடக்கில் வீடுகளை நிர்மானித்தல், மீன்பிடி வலைகளை கொள்வனவு செய்தல் மற்றும் உணவு விநியோகம் ஆகிய பணிகளுக்கு சீனா அரசு மேலும் 37.5 மில்லியன் ரூபாய்களை வழங்க முன்வந்துள்ளதாகவும் சீன தூதுவர் உறுதி அளித்துள்ளார்.

இலங்கை அரசு எல்லா இன மக்களையும் சரி சமனாக நடத்தவேண்டும் என்பதே சீனாவின் கொள்கை. வடக்கின் மீன்பிடித்துறையை அபி விருத்தி செய்து சீனாவுக்கான ஏற்றுமதியை ஊக்கிவிக் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலம் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் மக்கள், மீனவ சமூகங்கள், செஞ் சிலுவைச்சங்கம் மற்றும் அரச அதிகாரிகள் ஆகிளோர் சீன தூதுக்குழுவிற்கு அமோக வர வேற்பை வழங்கியதுடன், பாரம்பரிய நடன நிகழ்வகளும் இடம்பெற்றிருந்தன.

எனினும் வழமைபோல தமிழ் அரசியல் வாதிகள் தமது சுயநலம் கருதி தலை மறை வாகியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## சீன தூதுவரின் ... தொடர்ச்சி ...

**இந்தக் கடலட்டைப் பண்ணைகள் பாரம்பரியமான மீன்பிடித் தொழிலை முன்னெடுப்பவர்களை மற்றும் கடல்வளத்தைப் பாதிக்கும் என்பதில் எந்தளவுக்கு உண்மையுள்ளது?**

ஆம், இந்த கடலட்டைப் பண்ணைகள் வந்தமையால் எமது கடற்றொழில் பண்பாடு முற்றாகச் சிதைக்கப்படுகின்றது. அதனை எமது மீனவச் சமூகமும் யோசிக்கவில்லை. அவர்களை இந்த கடலட்டை மாயைக்குள் தள்ளியவர்களும் யோசிக்கவில்லை. இதனால், நாம் இழப்பவை அதிகம். அதனை நம்மவர்கள் புரிந்துகொள்ளாமலிருப்பதுதான் துயரம்.

கடலட்டைப் பண்ணைகளை வர்த்தக நோக்கத்துக்காகப் பயன்படுத்துவதில் எமக்கு ஆட்சேபனை இல்லை. நாம் பாரம்பரியமாக மீன்பிடிக்கும் இடங்களைத் தவிர்த்து வேறு இடங்களில் இதனைச் செய்யலாம். அதில் பிரச்சினை இல்லை. ஆனால், கரையோர மீன்பிடிக்கப் பயன்படுத்தப்படுகின்ற இடங்களையெல்லாம் இப்போது கடலட்டைப் பண்ணைகள் ஆக்கிரமித்துக்கொண்டுள்ளன. இதனால், கரையோர மீன்பிடியில் ஈடுபட்டுள்ள பலர் தமது தொழிலை விடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது.

இரண்டாவதாக, இந்தக் கடலட்டைப் பண்ணைகளுக்காக கடலுக்குள் வேலி போட்டு மின்சார லைட்களைப் போட்டுவைத்துள்ளார்கள். இதனால், கடலுக்குள் உயிரினங்கள் வாழும் சூழல் முழுமையாக இல்லாமல் போய்விடுகின்றது. கடலட்டைக்கும் வெளிச்சம் போடுவதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அவர்கள் களவைத் தடுப்பதற்காகத்தான் இவ்வாறு வெளிச்சம் போடுகின்றார்கள். இதனால், மீன்கள் கருக்கட்டுவதற்காக கரைக்கு வர முடியாமல் போய்விடுகின்றது. இதனால், மீன்வளம் அழிவடைகின்றது. மீன்களின் இருப்பை இந்த கடலட்டைப் பண்ணைகளில் போடப்படும் மின்சார வெளிச்சம் இல்லாமல் செய்துவிடுகின்றது. அதாவது இதனை அவர்கள் ஒரு அடாவடித்தனமாகத்தான் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆக, ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது கடல் வளமும், மீள்பிடிப் பண்பாடும், மக்களுக்குத் தேவையான கடலுணவை வழங்குவதற்கான வாய்ப்புக்கள் அத்தனையும் தகர்க்கப்படுகின்றது.

**அதாவது, பாரம்பரியமாக மீன்பிடிக்கும் இடங்களைத் தவிர்த்து வேறு இடங்களில் இந்தக் கடலட்டைப் பண்ணைகளை அமைத்தல் அதிகளவு பாதிப்புக்கள் இருக்காது எனக் கூறுகின்றீர்களா?**

ஆம் நிச்சயமாக. பாரம்பரியமாக மீன்பிடிக்கப்படும் இடங்களைத் தவிர்த்துவிட்டு தூர இடங்களில் இவற்றை அமைக்கலாம். அது அவர்களுடைய பிரச்சினை. ஏனெனில், மீன் என்பது ஆரோக்கியமான கடல் புரத உணவு. இவை எமக்குத் தேவையான ஒன்று. கடலட்டைகளை நாம் சாப்பிடுவதில்லை. எமது கடலில் பிடிக்க வேண்டிய மீனை நாம் பிடிக்காமல், கடலட்டைகளை உற்பத்தி செய்து சீனாவுக்கு ஏற்றுமதி செய்கின்றோம்.

• • •

## காஸாவில் இஸ் ... தொடர்ச்சி ...

காண்பிப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இறைவனை நோக்கி வேண்டுதல் செய்யவும், ஒருவரை ஒருவர் அணைத்து ஆறுதல் சொல்லவும், ஒரு சில மக்கள் இங்கு தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கிறார்கள். இற்ஸஹக் இங்கு அழைத்து வந்த மாணவர்களோ, புதிதாக வெதுப்பகத்திலிருந்து எடுக்கப்பட்ட பாண்களை அங்கே எடுத்து வந்திருந்தார்கள். யூத மறையைப் பொறுத்த வரை இது மிகவும் சக்திவாய்ந்த, பொருள் பொதிந்த ஓர் அடையாளமாகும்.

சமூகவியல், அரசியல் விஞ்ஞானம் ஆகிய துறைகளில் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி தற்போது ஓய்வுபெற்றிருக்கும் பெனி சுவெய்க், *(Benny Zweig)* ஹமாசின் தாக்குதலைத் தொடர்ந்து, தற்போது ஹமாசுக்கு எதிரான போரில் முழுமூச்சாக ஈடுபட்டுக்கொண்டிருக்கும் பிரதம மந்திரி பெஞ்சமின் நெத்தன்யாகுவுக்கு எதிராக தாக்குதல் நடைபெற்ற நாளிலிருந்து ஆர்ப்பாட்டம் செய்து வருவதாகக் கூறினார்.

"நெத்தன்யாகுவும் அவரது அரசும் சிறைப்படுத்தப்பட வேண்டும்' என்ற சுலோகத்தைத் தாங்கி, ஒவ்வொரு நாளும் இரண்டு தடவைகள் நான் எனது ஆர்ப்பாட்டத்தை காலை 10 மணியிலிருந்து 1.00 மணி வரையும், மாலை 5.00 மணியிலிருந்து 8.00 மணி வரையும் மேற்கொண்டு வருகிறேன்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இஸ்ரேலில் வாழ்கின்ற பலர் கருதுவதைப் போன்று, சுவெய்க்கும் ஒக்ரோபர் 7ம் திகதி ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதலுக்கான பொறுப்பின் ஒரு பகுதியை நெத்தன்யாகு ஏற்க வேண்டும் எனக் கோருகிறார். "எப்போதோ ஹமாசை நாங்கள் தோற்கடித்திருக்க வேண்டும். அதற்குப் பதிலாக கட்டார் நாட்டின் பணம் உள்ளே வர நெத்தன்யாகு அனுமதி வழங்கினார். 2018ம் ஆண்டில் ஹமாசினால் நிர்வகிக்கப்பட்ட காஸாவுக்கு மில்லியன்கள் கணக்கிலான டொலர்களை கட்டார் வழங்க நெத்தன்யாகு அனுமதி வழங்கியிருந்தார்."

பணத்தைக் கொடுத்து, ஒரு பயங்கரவாதக் குழுவின் நிகழ்ச்சி நிரலை நீங்கள் மாற்றியமைக்க முடியாது. அவர்களைத் தோற்கடிக்க இப்போது அதிக விலைகொடுக்க வேண்டியிருக்கும் என்று சுவேய்க் கூறினார். ஹமாசின் தாக்குதல் நடைபெற்று இப்போது ஒரு மாதம் கடந்துவிட்டது. ஆனால் கடத்திச்செல்லப்பட்ட தனது மகன் இற்றே *(Itay)* தொடர்பாக றூபி சென்னுக்கு *(Ruby Chen)* இதுவரை எந்தத தகவலும் கிடைக்கவில்லை, அவரது மூன்று ஆண்பிள்ளைகளில் இற்றே இரண்டாவது பிள்ளை ஆகும். ஓர் முன்னாள் சாரணரான இற்றே மிகச் சிறந்த கூடைப்பந்தாட்ட வீரர் என அறியப்படுகின்றது. ஒக்ரோபர் மாதம் 7ம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து இற்றே கடத்தப்பட்டார்.

இஸ்ரேலிலிருந்து கடத்தப்பட்டு, காஸாவில் வைக்கப்பட்டிருக்கும் பலரது குடும்பங்களைப் போன்று, பணயக் கைதிகளை விடுவிக்க வேண்டிய அத்தனையையும் இஸ்ரேல் அரசு மேற்கொள்ள வேண்டும் என்று அவர் அழுத்தம் கொடுத்துக் கொண்டிருக்கிறார். போரின் இரண்டாவது இலக்காக அது இருக்கக்கூடாது. பணயக்கைதிகளை விடுவிப்பதே முதலாவது, இரண்டாவது, மூன்றாவது இலக்காக இருக்க வேண்டும் என்று றூபி சென் வலியுறுத்தினார்.

**தொடரும்**

## திருப்பு முனை... தொடர்ச்சி ...

போட்டிருக்கலாம்.

இந்த நிலையில்தான் குகதாசனை தமிழரசுக் கட்சியின் அனைத்துப் பொறுப்புக்களிலிருந்தும் சம்பந்தன் அதிரடியாக நீக்கினார். திருமலையில், தென்னமரவாடி போன்ற தமிழ் மக்கள் மீளக்குடியேறிய பகுதிகளின் அபிவிருத்திக்காகவும், மக்களின் மீள் குடியேற்றத்தை பலப் படுத்தவும் முக்கியமான பங்களிப்பை வழங்கியவர் குகதாசன். பொறுப்புக்களிலிருந்து அவரை அகற்றியதன் மூலம் அவரைப் பலவீனப்படுத்த சம்பந்தன் முயன்றுள்ளார்.

### பதவி துறப்பாரா?

சம்பந்தனுக்கு இப்போது 90 வயது. பாராளுமன்றத்தில் உள்ளவர்களில் வயது முதிர்ந்தவர் அவர்தான். கட்சித் தலைமைப் பதவி தன்னிடம் மீண்டும் வரப்போவதில்லை என்பது அவருக்குத் தெரியும். ஆனால், எம்.பி. பதவியை வைத்துக்கொண்டிருப்பதன் மூலம் சில சிறப்புரிமைகள் அவருக்குள்ளது. அவற்றை விட்டுவிட அவர் தயாராகவில்லை.

அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது கொழும்பு - 7 பௌத்தலோக மாவத்தை பகுதியில் அவருக்கு வழங்கப்பட்ட கடுமையான பாதுகாப்புடன் கூடிய சொகுசு பங்களாவில்தான் அவர் இப்போதும் இருக்கின்றார். எம்.பி. பதவியைத் துறந்தால் அந்த பங்களாவிலிருந்து அவர் வெளியேற வேண்டியிருக்கும். ஆனால், சுமந்திரன் சொல்லியிருப்பது போல எதிர்க்கட்சித் தலைவருக்கான அந்த பங்களாவை விட்டு வெளியேறுவது அவருக்கு கௌரவம்!

ஜே.வி.பி.யின் தலைவராக நீண்டகாலம் இருந்த சோமவன்ச அமரசிங்க பாராளுமன்ற உறுப்பினராக இருக்கவில்லை. ஆனால், கட்சியைக் கட்டுப்படுத்தும் ஆளுமை அவருக்கு இருந்தது. அதேபோலத்தான், சோனியா காந்தி காங்கிரஸ் ஆட்சியிலிருந்த காலத்தில் கூட எம்.பி.யாக இருக்கவில்லை. ஆனால், மன்மோகன் சிங்கின் ஆட்சி அவரது கட்டுப்பாட்டில் இருந்தது. ஆனால், எம்.பி. பதவி இல்லையெனில் தன்னிடம் எந்தப் பிடியும் இல்லாமல் போய்விடும் என சம்பந்தன் அஞ்சுகிறாரா? அல்லது, அதன் மூலம் கிடைக்கும் சிறப்புரிமைகளை இழந்துவிட அவர் தயாராகவில்லையா?

## குருதிப் பரிசோத ... தொடர்ச்சி ...

குணப்படுத்தலாம் என தெரிவிக்கப்படுகின்றது. புற்றுநோக்கான அறிகுறிகள் மனிதர்களில் தென்படுவதற்கு முன்னரே அதனை கண்டறிவது சிகிச்சைகளை முன்னரே ஆரம்பிக்க உதவும் என்பதுடன் அதன் மூலம் பல உயிர்களை காப்பாற்ற முடியும் என இது தொடர்பாக அமெரிகாவில் இருந்து வெளிவரும் மருத்துவ சஞ்சிகையில் வெளியான கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இஸ்ரேல் நடத்தி ... தொடர்ச்சி ...

கலந்து கொண்ட இந்நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதியும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன *MP*, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் *MP*, ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி ஷம்பிக்க ரணவக்க *MP, SJB, MP*க்களான வேலுகுமார், இம்ரான் மஹ்ரூப், இஷாக் ரஹ்மான், எரான் விக்ரமரத்ன, சந்திம வீரக்கொடி, திஸ்ஸ அத்தநாயக்க, கபீர் ஹாஷிம், பௌசி, *SLPP, MP* காதர் மஸ்தான், *NPP* கட்சி சார்பில் விஜேத ஹேரத் *MP*, இலங்கை கம்பியூனிச கட்சியின் செயலாளர், இலங்கை பாலஸ்தீன நற்புறவுச் சங்கத்தின் தலைவர் பிமல் ரத்னாயக்க, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம், மு.க *MP* ஹரீஸ், முன்னாள் மேல் மாகாண ஆளுனர் அஸாத் சாலி, தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் சாணக்கியன் இராசமாணிக்கம் *MP*, *NFGG* கட்சித் தலைவர் அப்துர் ரஹ்மான், மவ்பிம ஜனதா கட்சி தலைவர் திலித் ஜயவீர, அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா பொதுச் செயலாளர் அர்க்கம் நூராமித், *IDM* பல்கலைக் கழக நிறுவனர் ஜனகன் விநாயகமூர்த்தி மற்றும் முஸ்லிம் சமூக பிரதிநிதிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டு உரையாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

**வல்லாண்மை ... தொடர்ச்சி ...**

வரலாற்றுக்கடமையாகவும் அனைத்துலக மக்களின் இணைப்புக்கான தேவையாகவும் உள்ளது.

இந்நேரத்தில் 2009 முதல் இன்று வரை அதே சிறிலங்காவின் நட்பு நாடுகளின் உதவியுடனும் திருகோணமலைச் சிறிலங்காப் பாராளுமன்ற உறுப்பினரான திரு. சம்பந்தனின் சிறிலங்காத் தேசியக் கொடியைத் தனது தலைக்கு மேல் தூக்கிப்பிடித்து உள்ளக பொறிமுறை மூலம் ஈழத்தமிழின அழிப்புக்கான நீதியைப் பெறுவோம் என்ற பிரகடனத்தின் அடிப்படையிலும் இந்த இனஅழிப்புக்கான தண்டனை நீதியோ பரிகார நீதியோ பெறமுடியாத நிலை அனைத்துலக மட்டத்தில்உள்ளது. ஆயினும்இந்தஇனஅழிப்பால் தங்கள் கிட்டிய குடும்ப உறுப்பினர்களை இழந்தவர்களும் சிறிலங்காப் படையினரால் விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் கிட்டிய குடும்ப உறுப்பினர்களும் இன்றுவரை நீதிக்கான ஏக்கத்துடன் வாழ்ந்து வேதனையுடன் 14 ஆண்டுகளாகத் தெருவில் நின்று போராடி மடிந்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் குறித்த உலக மக்களின் பார்வையைத் திருப்புதல் தேசமாக ஒருங்கிணைந்து எழுவதற்கான தளமாக முன்னெடுக்கப்படல் முக்கியம்.

அதே நேரத்தில் இலங்கைத் தீவின் தேச இனமான ஈழத்தமிழர்களை சிறிலங்காவில் வாழும் ஒரு சமூகம் என்று வரைவுபடுத்தி அவர்களின் இறைமையையும் தாயக தேசிய தன்னாட்சி உரிமையையும் இல்லாதொழிக்கும் புதிய அரசியல் அமைப்பு ஒருநாடு ஒருசட்டம் என்ற விருதுவாக்கியத்துடன் பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்படப்போகிறது. இதற்கு எதிரான சனநாயகப் போராட்டங்களை ஒடுக்கவெனப் புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் இதுவரை இருந்ததை விட மேலும் மோசமான முறையில் மனித உரிமைகளை பறித்தல் மக்கள் உரிமைகளை மறுத்தல் சட்டத்தின் ஆட்சியை நீக்கல் போன்ற அனைத்துலகசட்டங்கள் மனித உரிமைகள் எதனையும் ஈழமக்கள் நெருங்க இயலாத வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. கூடவே நிகழ்நிலைத்தடுப்புச்சட்டம் என்ற பெயரில் சமூக ஊடகங்கள் உட்பட்ட அனைத்து ஊடகங்களுக்குமான ஊடகச்சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தல் வழி ஈழத்தமிழர்களின் அன்றைய பிரச்சினைகளை வெளிப்படுத்தும் பொதுக் கருத்துக்கோளம் ஒன்றை அனைத்துலக மட்டத்தில் உருவாக்காதவாறு மக்கள் கருத்துச் சுதந்திரத்தை முற்றாக இன்றைய சிறிலங்கா அரசு முடக்கியுள்ளது.

இவ்வாறு நடைமுறை உண்மைகள் வெளிவராதவாறு செய்யும் சிறிலங்கா தமிழ் பௌத்தமாகவே இலங்கைத் தீவில் பௌத்தம் தொடக்கமுற்றது என்ற வரலாற்று உண்மையைத் திரிபுபடுத்தி தமிழர் தாயகங்களில் உள்ள தமிழருக்குச் சொந்தமான காணிகளிலும் அரசுக் குரிய நிலங்களிலும் வளமான நிலங்களையும் வாழ்வாதாரத் தரைகளையும் பௌத்த தொல்லியல் பகுதிகள் என்ற தொல்லியல் திணைக்களத்தின் நியாயப்பாட்டுடன் பிக்குகளைக் கொண்டு பௌத்த விகாரங்களை படையினரின் துணையுடன் கட்டி படையெடுப்பு ஒன்றில் மண்ணை எப்படி ஒரு படைநகர்வு மெல்ல மெல்ல முன்னேறி முழுமையாக ஆக்கிரமிக்குமோ அதே பாணியில் ஒவ்வொரு மாதமும் புதிய புதிய நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்வதை இன்றைய சிறிலங்கா தனது ஈழத்தமிழ் மக்கள் மீதான பண்பாட்டு இனஅழிப்பாகவும் இனத்துடைப்பாகவும் முன்னெடுத்து இவ்வாரத்தில் திருகோணமலை இலுப்பைக்குளப்பகுதி வரை முன்னேறி கிழக்கையும் யாழ் குடாநாட்டுக்கு உள் வரை முன்னேறி வடக்கையும் நில ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கியுள்ளது.

இந்த நில ஆக்கிரமிப்பில் பெறப்படும் நில விரிவாக்கமும் ஈழத்தமிழரின் இந்து மாக்கடலில் தனது கடற்படை மூலம் ஆக்கிரமித்துள்ள கடல்பரப்புக்களையும் பிறநாடுகளுக்கு குத்தகைக்கு கொடுப்பதன் மூலம் ஈழத்தமிழர்களை தனது நேசநாடுகளின் சந்தை இராணுவத் தேவைகளுக்கும் தனது பொருளாதார வங்குரோத்து நிலையில் பணத்தைப் பெறுவதற்கும் பயன்படுத்தி வருகிறது. இவ்வாறு தமிழர் தாயகத்தின் உட்கட்டுமானங்களை உருக்குலைக்கும் சிறிலங்கா இளம் தமிழரின் கல்வியை ஒழுக்கத்தை சிந்திக்கும் திறனை ஆற்றல்களை அறிவை மழுங்கடிக்கும் வகையில் கடுமையான போதைப்பழக்கங்களுக்கு அடிமையாக்கி அவர்களின் எதிர்கால வாழ்வையே நாசப்படுத்துதல் கட்டற்ற பாலியல் பழக்க வழக்கங்களுக்கும் பழக்கப்படுத்தி அவர்களின் உள, உடல் நலங்களை அழித்தல் என்கின்ற இருமுனை உத்திகளையும் மகிழ்வித்தல் என்ற பெயரில் பிரமாண்டமான கலைநிகழ்ச்சிகளை நடத்தி, இளம் தலை முறையினரை சமூக பொருளாதார அரசியல் ஆன்மீகச் சிந்தனைகளில் இருந்து திசை திருப்பும் செயற்பாடுகளையும் இந்தியாவுடன் இணைந்து திட்டமிட்ட முறையில் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அதேநேரம் ஈழத்தமிழர் ஒருங்கிணைப்பு மூலம் ஈழத்தமிழர்கள் தேசமாக எழுந்து தங்கள் மண்ணையும் மக்களையும் அவர்களின் இறைமையுடன் கூடிய அவர்களில் இருந்து யாராலும் என்றும் பிரிக்கப்பட முடியாத தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளையும மீளுருவாக்கம் செய்யும் தேசநிர்மாணத்தை முற்றாக அழித்தொழிப்பதற்கு ஈழத்தமிழ்த் தேசிய உணர்வை ஈழத்தமிழ் மக்களிடம் இருந்து நீக்கும் நுட்பமான மறைமுகச் செயல்முறைகளும் வெளிப்படையான நேரடிச் செயல்முறைகளும் ஈழத்தமிழரிடையில் சிறிலங்கா இந்திய அரசுகக்களால் வேகமான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த அபாயம் ஏற்படும் என்றே; ஈழத்தமிழர்கள் ஒருங்கிணைப்பு என்பதே மக்களுக்கான சக்தியளிக்கும் என்ற ஒரே நோக்கிலே 1983 ம் ஆண்டு ஆடி ஈழத்தமிழின அழிப்பை அடுத்து ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் எல்லாம் ஈழத்தமிழர் ஒருங்கிணைப்புக்குழுக்கள் தேசியத் தலைமையால் அமைக்கப்பட்டு அதன் பின்னரே நடைமுறையரசு நடைமுறைச் சாத்தியமாக்கப்பட்டது. அந்த வகையில் இந்த தமிழர் ஒருங்கிணைப்புக்குழுக்கள் தான் ஈழத்தமிழர் தாயகத்தின் சக்தி வழங்கல் அமைப்புக்கள். இப்பொழுது இந்தக் கட்டமைப்பை ஈழத்தமிழரிடை சந்தேகங்களையும் அச்சங்களையும் ஏற்படுத்துவதன் மூலம் நெகிழச் செய்யும் அல்லது இல்லாதொழிக்கும் முயற்சிகள் பலவழிகளில் பலநிலைகளில் சிறிலங்காவாலும் இந்தியாவாலும் வேகப்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழக மக்களுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையில் உள்ள தொப்புள் கொடியுறவை அறுப்பதும் இந்த முயற்சிகளின் மற்றொரு நோக்காகவுள்ளது.

இதற்காக உணர்ச்சிகளைத் தூண்டுவதன் மூலம் பிளவுகளை ஏற்படுத்தல் என்ற உத்தி இங்கே வேகமாக வளர்க்கப்பட்டு தன்கண்ணைத்தன்விரல் கொண்டே குத்தும் உத்தி ஈழத்தமிழரிடையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்நிலையில் ஒருங்கிணைப்பில் ஈடுபடுபவர்கள் யாராக இருப்பினும் துப்பாக்கிகள் மௌனிக்கப்பட்டு சனநாயகவழிகளில் தங்கள் உரிமைகளுக்காகப் போராட வேண்டிய நடைமுறை எதார்த்தம் ஈழத்தமிழருக்கு வாழ்வாக்கப்பட்டுள்ள நிலையில் ஒவ்வொரு ஈழத்தமிழரும் தனது அறிவு ஆற்றல் பொருளாதாரநிலை நட்பு வட்டங்கள் என்பவற்றின் அடிப்படையில் மண்ணினதும் மக்களதும் நாளாந்த வாழ்வைப் பாதுகாக்கவும் அடக்குமுறைகள் ஒடுக்கு முறைகளில் இருந்து விடுதலை பெறவும் உழைக்க வேண்டிய காலக் கட்டாயம் உருவாகியுள்ளது.

மேலும் தேசிய விடுதலைப் போராட்ட காலத்தில் கையாளப்பட்ட கட்டுப்படுத்தி கட்டளைப்படுத்தும் அதே முறைகள் வழியாக மக்களினது சுதந்திரமான செயற்பாடுகளை நெறிப்படுத்துதல் இன்றைய காலகட்டத்தில் மக்களை ஒருங்கிணைப்பதில் செயற்றிறன் குறைந்தவையாகவே அமையும் என்பது வெளிப்படையான உண்மை.

அதே நேரத்தில் ஒரு தலைமைத்துவத்தில் தாயகம் தேசியம் தன்னாட்சியை மக்களின் இறைமையின் அடிப்படையில் உறுதிப்படுத்தி, எவராலும் என்றும் மாற்ற இயலாத கொள்கையான ஈழத் தமிழர் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளை அவர்களின் இறைமையினை முன்னிறுத்தி வென்றெடுத்தல் என்ற உறுதிப்பாட்டுடன் சமகாலத்துக்கான கோட்பாடுகள் உருவாக்கப்பட்டு அதன் அடிப்படையில் அனைவரையும் ஒருங்கிணைக்க ஈழத்தமிழர் ஒருங்கிணைப்பில் ஈடுபடும் அனைவரும் ஒருமித்து சுட்டொருங்கு இயக்கச் செயற்பாடுகளில் ஒவ்வொருவரது தனித்துவத்தையும் அனுமதித்த நிலையில் பொதுவேலைத் திட்டங்கள் வழி இணைந்து செயற்பட்டாலே ஈழத்தமிழர் தேசமாக எழும் பலம் நடைமுறைச்சாத்தியமாகும். இந்த முயற்சிக்கு ஈழத்தமிழர்களுக்கு விஞ்ஞானி மயில்சாமி அண்ணாத்துரை அவர்களின் உரை செயற்பாட்டுப் பலமளிக்கிறது. அவர் எவ்விதமாக பெரியாரின் சிந்தனையில் உறுதியாகத் தன்னை வளர்த்தாரோ அவ்வாறே ஈழத்தமிழர்களும் தேசியத் தலைவரின் எனது மண் எனது மக்கள் இரண்டினதும் பாதுகாப்பான அமைதி என்ற சிந்தனையில் தங்களை ஆழப்படுத்திக் கொள்ளல் அவசியம். விஞ்ஞானி மயில்சாமி அண்ணாத்துரை அவர்கள் எவ்வாறு அமெரிக்க இரஸ்ய கொள்கைகளுக்கு மேலாகத் தன்னில் நம்பிக்கை வைத்து தனது எண்ணத்தைச் செயற்படுத்தி வல்லாண்மைகளின் கொள்கையையும் மாற்றிட முயன்றாரோ அவ்வாறு ஒவ்வொருவரும் வெளிநாடுகள் அமைப்புக்கள் எமக்கான தீர்வைத் தரவேண்டுமென்ற நினைப்பில் இருந்து விடுபட்டு நாங்கள் உறுதியாக ஒன்றுபட்டுச் செயற்படுவதன் மூலம் வெளிநாடுகளை அமைப்புக்களை எங்களை நாடிவரவைக்கும் ஆற்றல்களை அறிவை வெளிப்படுத்த வேண்டும். விஞ்ஞானி மயில்சாமி அவர்கள் எவ்வாறு செயற்பாட்டுக்கான கொள்கைளை முறைமைகளைத் தனது அறிவால் தலைகீழாக மாற்றி அதற்கான புதிய முறைமைகளைச் செயற்படுத்தினாரோ அவ்வாறே சமகாலத்தை சமகால உலகை வெல்லக் கூடிய முறையில் எங்கள் கொள்கைகள் கோட்பாடுகளை ஈழத்தமிழரின் இறைமையுடன் கூடிய தாயகம் தேசியம் தன்னாட்சி என்ற அடிப்படைக் கொள்கையில் உடைவு ஏற்படாது மாற்றி புதிய செயற்பாட்டு முறைகளை சனநாயக வழியில் உலகம் ஏற்கக் கூடிய முறையில் அமைத்து மண்ணினதும் மக்களினதும் பாதுகாப்பான வாழ்வை அனைத்துலக மக்களினது இணைப்புடன் உருவாக்க உழைக்க வேண்டும். உலகத் தமிழர்களாக கனடா முதல் இலங்கை வரை வாழும் ஈழத்தமிழர்கள் அவரவர்கள் வாழும் நாடுகளின் சட்டதிட்டங்களுக்கு ஒழுங்கு முறைமைகளுக்கு உட்பட்டு சனநாயக வழிகளில் தாயக-உலக-தாம் வாழும் நாட்டு ஈழத்தமிழர்கள் என்ற முக்கோண நிலைப்பட்ட தொடர்பாடல்களை வேகப்படுத்தி பொதுவெளியில் கூட்டொருங்கு செயற்பாட்டின் மூலம் ஒரு தேசமாக எழுதலே உண்மையான ஒருங்கிணைப்பாக மாறி தாயகத்தில் மண்ணும் மக்களும் பாதுகாப்பான அமைதி வாழ்வு பெற உதவும். இதற்கான செயற்பாட்டுப் பலத்தை விஞ்ஞானி மயில்சாமி அண்ணாத்துரை அவர்களின் பேச்சு தருகின்றது.

• • •